
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


பஞ்சாப் வெற்றி பக்கம் 4

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 121 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 06 சனிக்கிழமை (19.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## ஜனாதிபதி என்பதை மறந்து மன்னாரிலும் கட்சித் தலைவராய் கர்ச்சித்த அநுர

### தேர்தல்கள் ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மன்னாரில் இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்திலும் தேர்தல் விதி முறைகளை மீறிக் கருத்துக் களை வெளியிட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள் ளன.

இது தொடர்பிலான முறைப் பாடுகள் கிடைக்கப் பெற்ற தையடுத்து விசாரணைகளை முன்னெடுக்கத் தேர்தல்கள் ஆணைக்குழு நாளை மறு தினம் திங்கட்கிழமை கூட வுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## பொலிஸ் நிலையம் சென்ற இளைஞனே சடலமாக மீட்பு

### உறவினர்கள் வாக்குமூலம்



(வவுனியா)


வவுனியா, உளுக்குளம் பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்ற இளைஞனே இரத்தக் கறைகளுடன் சடல மாக மீட்கப்பட்டுள்ளதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, பாவற்

15ஆம் பக்கம் பார்க்க

## சி.ஐ.டியில் ஆஜராகவுள்ள பிள்ளையானின் சகா

### அமைச்சர் விஜேபால தெரிவிப்பு



(கொழும்பு)

கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் காணா மலாக்கப்பட்டமை தொடர் பில் கைது செய்யப்பட்டுத் தற்போதுதடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள பிள்ளை யான் எனப்படும் சிவநேச

15ஆம் பக்கம் பார்க்க

## மனக் கவலை அடைந்த மோடி

# சேது அணைத் திட்டத்துக்கு உடன்படாத அநுர அரசு!

### அம்பலப்படுத்தியது கொழும்பு ஊடகம்

(கொழும்பு)



இந்தியாவுக்கும் இலங்கைக்குமான தரைவழிப் பாதையான சேது அணைத் திட்டத்துக்கு இலங்கை அரசாங்கம் தொடர்ந்தும் மறுப்புத் தெரிவித்து வருகிறது. இதனால் பேச்சுவார்த்தைகளில் தொடர்ந்தும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதுடன் இது குறித்து பிரதமர் மோடி மனக்கவலை கொண்டுள்ளதாகவும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## டிப்பரில் நசியுண்டு பாலகன் உயிரிழப்பு

### தந்தையின் கவனக்குறைவால் விபரீதம்

(கிளிநொச்சி)

தந்தை செலுத்திய டிப்பர் வாகனத்தில் ஒன் றரை வயது பாலகன் நசியுண்டு உயிரிழந்த சம்ப வம் கிளிநொச்சி அம்பாள்குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, டிப்பர் வாகனத்தின் பின்புறம் தனது மகன் விளையாடிக் கொண்டிருப்

15ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் மன்னார் பரப்புரை அப்பட்டமான தேர்தல் விதிமீறல்

### சுமந்திரன் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நேற்று முன்தினம் மன்னாரில் ஆற்றிய தேர்தல் பிரசார உரை தேர்தல் விதிமுறை மீறல் என இலங்கைத் தமிழரசுக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பதில் பொதுச்செயலாள

15ஆம் பக்கம் பார்க்க

## எம்மை நம்பி வாக்களித்த தமிழ் மக்களைக் கைவிடோம்

### சத்தியம் செய்கிறார் அமைச்சர் பிமல்

(கொழும்பு)

"எமது கட்சியை நம்பி வாக் களித்த தமிழ் மக்களை நாம் ஒரு போதும் கைவிடமாட்டோம்" என்று தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ் தரும் அமைச்சருமான பிமல் ரத் நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல நாடெங்கிலும் வாழும் தமிழ் மக்கள், கடந்த

16ஆம் பக்கம் பார்க்க

## காதலன் இறந்த சோகம் உயிர்துறந்த காதலி

(கொடிகாமம்)

தனது காதலன் உயிரி ழந்த செய்தியறிந்த சில மணி நேரத்துக்குள் காதலியும் உயிர் துறந்த நெகிழ்ச்சிச் சம்பவம் கொடிகாமம் மிருசுவில் பகுதி யில் இடம்பெற்றுள்ளது.

இத்துயரச் சம்பவம் தொடர் பில் மேலும் தெரியவருவதா வது,

நேற்று முன்தினம் வியா ழக்கிழமை வரணி சிட்டிவேரம் பகுதியில் உள்ள குளமொன்

15ஆம் பக்கம் பார்க்க

## தமிழ் மக்களை நம்ப வைத்து கழுத்தறுக்கிறது அநுர அரசு

### கஜேந்திரகுமார் குற்றச்சாட்டு



(யாழ்ப்பாணம்)

தையிட்டி விகாரை விவகாரத்தில் அது கட்டப்பட்ட விதம் சட்டவிரோதம்தான் என்ற நிலைப்பாட்டில் எந்தவொரு தமிழ் அரசியல் கட்சியிடமும் மாற்றுக் கருத்து இருக்கப் போவதில்லை எனச் சுட்டிக் காட்டிய தமிழ்த் தேசிய

04ஆம் பக்கம் பார்க்க


## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு

22 - 03 - 1955



இறப்பு

18 - 04 - 2025

## சுவாமிநாதன் சற்குணநாதன்

உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதன் சற்குணநாதன் அவர்கள் நேற்று (18.04.2025) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதன் - பொன்னாச்சி (சரசு) தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் சங்கரப்பிள்ளை - பராசக்தி தம்பதியரின் மருமகனும் கிருபாராணி அவர்களின் அன்புக் கணவரும் சஞ்சீவன் (இங்கிலாந்து), சாகீசன் (NDB Manager) ஆகியோரின் அன்புத் தந்தையும் குகநாதன் (கனடா), சகுந்தலாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிஷாந்தி (லண்டன்) அவர்களின் மாமனாரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் நடைபெற்று காலை 10 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக உசன் ஈச்சங்காட்டு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உசன்,
மிருசுவில் (C-2743)

தகவல் :
குடும்பத்தினர்

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



குரோதி வருஷம் பங்குனி மாதம் 28ம் நாள் (11.04.2025) வெள்ளிக்கிழமை பூர்வபக்ஷ சதுர்த்தசி திதியில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

## சிவஸ்ரீ குமாரசாமிக்குருக்கள் இரத்தினேஸ்வரக்குருக்கள்

அவர்களின் ஆத்மசாந்தி கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறும்.

20.04.2025 ஞாயிற்றுக்கிழமை
தசாகம் காலை 10.00 மணி
21.04.2025 திங்கட்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்
22.04.2025 செவ்வாய்க்கிழமை சபிண்டீகரணம்
23.04.2025 புதன்கிழமை கிருஹயக்ஞம் (சமாராதனை)

அன்னாரின் ஆத்மசாந்தி கிரியைகளில் கலந்து கொண்டு ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்குமாறு அழைக்கின்றோம்.


இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பிள்ளையார் கோவிலடி,
தாவடி, கொக்குவில். (1040)

071 236 2855
021 221 3851

இங்ஙனம் :
குடும்பத்தினர்

# 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் மகாதேவன் சதீஷ்குமார் (லண்டன்)

காலங்கள் கடந்தாலும்
ஆண்டுகள் சென்றாலும்
எங்கள் மனதில் நீ
என்றும் நிலைத்திருப்பாய்
அன்பின் அடையாளமாக
அறத்தின் புதல்வனாக
அன்பின் சிவமாக என்றும்
எங்களில் வாழ்கிறாய் சதீஷ்

(1039)

தோற்றம் 16.09.1981

மறைவு 19.04.2013

வல்லை வீதி,
தொண்டைமானாறு.

தகவல்:
சி.மகாதேவன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## செல்வி சின்னத்துரை பூமலர்

### (இதய செவிலியர், சத்திரசிகிச்சை முகாமையாளர், மகப்பேற்று பிரிவில் தலைமைத்துவ செவிலியர்)

யாழ்ப்பாணம் உடுப்பிட்டி வீரபத்திரர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், லண்டன் (Eastham UK) உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சின்னத்துரை பூமலர் அவர்கள் 15.04.2025 செவ்வாய்க்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை இளையாச்சி தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான இராஜலட்சுமி, வியாகேஸ்வரி மற்றும் சோதிமலர் (அவுஸ்திரேலியா), ராணிமலர் (கனடா), காலஞ்சென்றவரான அருந்தவராஜா மற்றும் நவமலர் (இலங்கை), நடராஜா (கனடா), நாகேஸ்வரி(பிரான்ஸ்), ஆனந்தராஜா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், குணசிங்கம், சிவசாமி, ஜெயரட்ணம், பாலகிருஷ்ணன் மற்றும் கிருஷ்ணசாமி (இலங்கை, கனடா), கமலாதேவி(இலங்கை), புஸ்பராணி (கனடா), கௌசல்யா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் வரதலட்சுமி(இலங்கை), ஜெயலட்சுமி(லண்டன்), நித்தியானந்தலட்சுமி (இலங்கை), ஞானலட்சுமி(லண்டன்), வரதராஜன் (கனடா), ஸ்ரீஸ்கந்தராஜா(லண்டன்), ஜீவராஜா(லண்டன்), வசீகரன் (கனடா), உமாசுதா(சோபி) (அவுஸ்திரேலியா), கிரிஷாந்தி (லண்டன்), கோவர்த்தினி (இலங்கை), வினோத்காந்த் (பிரான்ஸ்), சஜீவ்காந்த் (பிரான்ஸ்), அஜித்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும் வாசுகி (பிரான்ஸ்), சிந்துஜா (இலங்கை), அபிராமி (இலங்கை), ஸ்ரீராம் (இலங்கை), ஜெயராம் (ஜெயா) (லண்டன்), ரகுராம் (கனடா), ரவிசங்கர் (கனடா), உதயசங்கர் (கனடா), ரகுசங்கர் (கனடா), நீராஜினி (கனடா), ஆரணி (பிரான்ஸ்), அருணன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கரும்பாவளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நடராஜா : +16474098535
ஆனந்தராஜா : 0033601281192
ஜெயா : 00447930333111 (C-2741)

தகவல்:
சின்னத்துரை குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் மீதான மக்களின் ஆர்வம் குறைந்து விட்டது

## பவ்ரல் அமைப்பு தெரிவிப்பு

**(கொழும்பு )**

**உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மீதான பொது மக்களின் ஆர்வமும் குறைவாக இருப்பதாக பவ்ரல் கண்காணிப்பாளர்கள் தெரிவித்ததாக அதன் நிர்வாகப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.**

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசாரங்கள் தொடங்கியதிலிருந்து எந்தவொரு பாரதூரமான சம்பவங்களும் பதிவாகவில்லை என்றும் பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், தேர்தல்கள் பணிகளுக்காக சுமார் 4,000 கண்காணிப்பாளர்களை ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-8)




# போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்பட்டனர்

## ஒழித்தே தீருவோம் என்கிறார் பிரதமர்



(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள் அரசியல்வாதிகளால் பாதுகாக்கப்பட்டமை காரணமாகவே, கடந்த காலங்களில் இலங்கையின் சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தை ஒழிக்க முடியவில்லை என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு கொலன்னாவையில் நடைபெற்ற தேசிய மக்கள் கட்சியின் பொதுக் கூட்டத்தில் பிரதமர் கருத்தை வெளியிட்டுள்ளார்.


கொலன்னாவ என்பது சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்தின் இடமாக மாறிவிட்டது. அரசியல்வாதிகள் அதை நடக்க அனுமதித்ததன் காரணமாகவே இது நடந்தது என்று பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், சட்டவிரோத போதைப்பொருள் வர்த்தகத்திற்கு வழங்கப்படும் அரசியல் பாதுகாப்பு குறித்த விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தொடர்ந்து தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்கு தீர்வு காணவே தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இருப்பினும், அவற்றை மேற்கொள்ள அவசரப்படப்போவதில்லை என்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

# பிள்ளையான் கைது விவகாரம் கலக்கத்தில் ரணில் மற்றும் கம்மன்பில

## –ரில்வின் சில்வா பகிரங்கம்–



(கொழும்பு)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் என்றழைக்கப்படும் சிவனேசதுரை சந்திரகாந்தன் கைது செய்யப்பட்டமையால் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வருத்தமடைந்துள்ளார் என ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த அவர்,

"வழக்கறிஞர் உதயகம்மன்பில தனது வாழ்க்கையில் ஒரு போதும் ஒரு வழக்கை வாதிட நீதிமன்றத்திற்குச் சென்றதில்லை. அவர் முதலில் வாதிடுவது பிள்ளையான் வழக்கே.

ரணில் விக்கிரமசிங்க சட்டத்தை ஒதுக்கி வைத்துவிட்டு, பிள்ளையானுடன் தொலைபேசியில் பேச முயற்சிக்கிறார்.

ஆனால் இப்போது நம்மிடம் இருப்பது முன்பு இருந்தது போன்ற பொலிஸ் அமைப்பு அல்ல. நாங்கள் மாறிவிட்டோம்.

அவர் முன்னாள் ஜனாதிபதியாக இருக்கலாம். ஆனால் சட்டம் அனைவருக்கும் ஒன்றுதான்.

அடுத்து, கம்மன்பில அவருக்கு உதவ முயற்சிக்கிறார். ஒரு சாதாரண நபரை சந்திக்க அனுமதிக்க முடியாது என்று கூறப்பட்ட பிறகு, கம்மன்பில தான் வழக்கறிஞர் என்று கூறுகிறார்.

கிழக்கு மாகாணத்தில் எத்தனை குற்றங்கள் நடந்தன என்பது உங்களுக்குத் தெரியும்.

ஏராளமான பொலிஸ் அதிகாரிகள் கொல்லப்பட்ட சம்பவத்திலும் அவருக்குத் தொடர்பு இருப்பதாகப் பேச்சு நிலவுகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்தும் சந்தேகங்கள் உள்ளன. இவை அனைத்தும் நடைமுறையில் இருக்கும் போது, இதுபோன்ற குற்றங்கள் குறித்து விசாரிக்கப்படும் பிள்ளையானை மீட்பதில் உதயகம்மன்பில தலைவராகிறார்.

இந்த நாட்டில் இடம்பெற்ற குற்றங்கள் அனைத்தும் தனிமைப்படுத்தப்பட்ட குற்றங்கள் அல்ல என ரில்வின் தெரிவித்தார். (நி-8)

# தலதா மாளிகையில் ஜனாதிபதி வழிபாடு



(கண்டி)

ஸ்ரீதலதா வழிபாட்டின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்து கொண்டுள்ளார்.

கண்டி ஸ்ரீ தலதா மாளிகையில் உள்ள புத்த பகவானின் புனித தந்த தாதுவை நேரடியாக வழிபடுவதற்கான சந்தர்ப்பம் நேற்று தொடக்கம் எதிர்வரும் 10 நாட்களுக்கு பக்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

சுமார் 16 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஸ்ரீதலதா வழிபாட்டின் ஆரம்ப நிகழ்வில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவும் கலந்து கொண்டிருந்தார். (நி-8)

# டெங்கு நோயால் இதுவரை ஐவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாட்டில் இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் டெங்குக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு 5 பேர் உயிரிழந்துள்ளதாகத் தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. அத்தோடு, டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில், இதுவரை 14,678 டெங்கு நோயாளிகள் பதிவாகியுள்ளதாகவும், தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

மேலும், அதிக காய்ச்சல், தலைவலி, தசை மற்றும் மூட்டு வலி, குமட்டல் மற்றும் வாந்தி, தோலில் சிவப்பு நிற கொப்புளங்கள் மற்றும் இரத்தப்போக்கு போன்ற அறிகுறிகள் இருப்பின் உடனடியாக மருத்துவமனைக்கு செல்லுமாறும் பொது மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (நி-8)

வன்னிநேயம் புலமைபரிசில் – 2025

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தினால் நியூசிலாந்து வன்னிநேயம் அமைப்பின் நிதிப் பங்களிப்புடன் முன்னெடுக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமை பரிசில் திட்டம்!

பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் பொருளாதாரம் பின்தங்கிய மாணவர்களுக்கான புலமை பரிசில் திட்டம் ஆண்டுதோறும் எம்மால் முன்னெடுக்கப்படுகிறது! தேவையுடைய மாணவர்கள் விண்ணப்பிக்கலாம்!

(3969)


விண்ணப்பங்களின் அடிப்படையில் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு தலா 125 000/= பெறுமதியான புலமை பரிசில் வழங்கப்படும்!

தொடர்புகளுக்கு: 070 641 7659
076 038 9828

விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள பின்வரும் QR Code scan செய்யவும் !

விண்ணப்ப இறுதித்திகதி : 23.04.2025

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மழையின் கெடுபிடிக்கு மத்தியில்

# அஞ்சாத பஞ்சாப்புக்கு அஞ்சாவது வெற்றி

### சொந்த மண்ணில் பெங்களூரு மீண்டும் சோகம்
### ரிம் டேவிட்டின் அதிரடி வீணானது

மழையின் கெடுபிடிகளுக்கு மத்தியில் பஞ்சாப் அணி 5 விக்கெட்டுக்களால் பெங்களூருவை வெற்றி கொண்டது.

இந்தியன் பிரீமியர் லீக் தொடரில் பெங்களூரு சின்னசாமி மைதானத்தில் நடந்த போட்டியில் பெங்களூரு அணி, பஞ்சாப் அணியை எதிர் கொண்டது. மழையால் தாமதமாக தலா 14 ஓவர்கள் கொண்டதாக மாற்றப்பட்டு போட்டி தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப், களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

**ஹோலி ஏமாற்றம்**

பெங்களூரு அணிக்கு ஹோலி, பில் சால்ட் ஜோடி ஆரம்பம் கொடுத்தது. அர்ஷ்தீப் சிங் வீசிய போட்டியின் 4வது பந்தில் சால்ட் (4), ஆட்டமிழந் தார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹோலி, ஒரு ஓட்டம் மட்டும் எடுத்து, அர்ஷ்தீப் "வேகத்தில்" வீழ்ந்தார். பார்ட்லெட் பந்தில் பவுண்டரி அடித்த லிவிங்ஸ்டன் (4), அடுத்த பந்தில் ஆர்யாவிடம் "பிடி" கொடுத்தார்.

**டேவிட் அரைச்சதம்**

தொடர்ந்து விக்கெட் சரிய, அணியின் ஓட்டவேகம் அப்படியே குறைந்தது. இந்நிலையில் பந்தை சுழற்றிய சஹால், ஜிதேஷ் சர்மாவை (2) திருப்பி அனுப்பினார். யான்சென் "வேகத்தில்" குர்னால் பாண்ட்யா (1), அவரிடமே பிடி கொடுத்தார். ரஜத் படிதரும் 23 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பெங்களூரு அணி ஒரு கட்டத்தில் 8.2 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெறும் 42 ஓட்டங்களை எடுத்து தத்தளித்தது.

பின் வந்த டிம் டேவிட், அர்ஷ்தீப் ஓவரில் இரண்டு பவுண்டரிகள் அடித்தார். ஹர்பிரீத் ஓவரில் புவனேஷ்வர் (8), யாஷ் தயாள் (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். மீண்டும் வந்த ஹர்பிரீத் ஓவரில் "ஹட்ரிக்" சிக்சர் அடித்த டிம் டேவிட், அரைச்சதம் எட்டினார்.


இறுதியில் பெங்களூரு அணி 14 ஓவரில் 9 விக்கெட்டுக்களை இழந்து 95 ஓட்டங்களை எடுத்தது. டேவிட் (50 ஓட்., 26 பந்து) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் பஞ்சாப் சார்பில் அர்ஷ்தீப், யான்சென், சஹால், ஹர்பிரீத் தலா 2 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர்.

**வதேரா விளாசல்**

பஞ்சாப் அணிக்கு பிரியான்ஷ் ஆர்யா (16), பிரப்சிம்ரன் (13) ஜோடி சுமார் ஆட்டம் கொடுத்தது. ஹேசல்வுட் ஓவரில் ஷ்ரேயஸ் (7), இங்லிஸ் (14) ஆட்டமிழந்தனர். ஷசாங்க் (1) நிலைக்கவில்லை. சுயாஷ் பந்துகளில் வதேரா (33*) 2 சிக்சர் அடிக்க, வெற்றி எளிதானது. கடைசியில் ஸ்டாய்னிஸ் (7*) ஒரு சிக்சர் அடிக்க, பஞ்சாப் அணி 12.1 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்கள் எடுத்து 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. சொந்த மண்ணில் தொடர்ந்து மூன்றாவது முறையாக வீழ்ந்தது பெங்களூரு அணி.

(ந-4,7)



## தமிழ் மக்களை...

மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தையிட்டி விகாரையின் கட்டுமானத்துக்கு முக்கிய கரணமாக இருந்தவர்கள் ஜே.வி.பியினர் தான் என்றும் சுட்டிக்காட்டியுள்ளர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (18) ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்த அவர் இவ்வாறு கூறியிருந்ததுடன் அது தொடர்பில் மேலும் கூறுகையில்,

இனவாதத்துக்கு இடமில்லை என்று கூறும் அநுர தரப்பே தையிட்டி விகாரையின் கட்டுமானத்துக்கு முக்கிய கரணமாக இருந்தனர்.

இவர்களே அன்று இந்த திஸ்ஸ விகாரையின் கட்டுமானம் ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில் குறித்த பகுதி மக்கள் எதிர்ப்புத் தெரிவித்த போது, விகாரையை அமைக்கும் நடவடிக்கைக்கு யாழ்ப்பாணத் தமிழர்கள் மதவாதம் பேசுவதாகக் கூறி சிங்கள மக்களை திசைதிருப்பி விகாரையைக் கட்டிமுடிக்கச் செய்திருந்தனர்.

ஆனால் இன்று குத்துக்கரணம் அடித்து, மக்களை ஏமாற்றி எமது மக்களின் நலன்களை முன்னிறுத்திப் போராடும் தமிழ் அரசியல் கட்சிகள் மீது குறிப்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மீது குற்றச்சாட்டை சுமத்தி அரசியல் செய்கின்றனர்.

இனவாதத்தைத் தூண்டும் இந்த தேசிய மக்கள் சக்தி, தமிழ்க் கட்சிகள் மீது பொய்க் குற்றச்சாட்டுக்களை கூறி அவர்களது உச்சபட்ச இனவாதத்தின் வெளிப்பாட்டைக் காட்டுகின்றது.

முன்னைய அரச தலைவரான கோட்டாவுக்கு இரண்டு வருடம் தேவைப்பட்டது அவரது உண்மை முகத்தைக் காட்ட, ஆனால் இந்த ஜே.வி.பியின் உண்மையான முகம் 6 மாதங்களுக்குள் வெளிப்பட்டுவிட்டது.

குறிப்பாக முன்னவர்கள் இனவாதிகள். அதை அவர்கள் வெளிப்படையாகவே காட்டினர். ஆனால் இவர்கள் அதைவிட மோசமானவர்கள். மக்களை நம்பவைத்து தம்வசப்படுத்தி கழுத்தறுக்க முயற்சிக்கின்றனர்.

இதேவேளை உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசார மேடைகளில் ஜனாதிபதியின் பிரசாரப் பேச்சுக்கள் தமிழ் மக்களின் இருப்பை சூட்சுமமாக இல்லாதொழிக்கும் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்கியதாகவே உள்ளது.

இது அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசின் அச்சுறுத்தும் அரசியல் போக்காகவே இருக்கின்றது.

மக்களின் ஆதரவைப் பெறுவதற்காகப் பல வாக்குறுதிகளை அள்ளி வழங்கிய அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியினர் அந்த வாக்குறுதிகளுள் ஒன்றைக்கூட நிறைவேற்றாது மீண்டும் புதிய பல வாக்குறுதிகளை அள்ளி வீசுகின்றனர். இது தமிழ் மக்களின் வாக்குகளைச் சூறையாடும் முயற்சியாக இருக்கின்றதே தவிர, தமிழ் மக்களின் நலன்களுக்கானதாக ஒருபோதும் இருக்கப் போவதில்லை.

இதை எமது மக்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். அத்துடன் இதன் வெளிப்பாட்டை உள்ளூராட்சித் தேர்தலிலும் வெளிப்படுத்த வேண்டும்.

அந்தவகையில் தமக்கு வாக்களித்தால்தான் பிரதேச சபைகளுக்கு நிதி விடுவிக்கப்படும் என்ற ஜனாதிபதியின் கருத்தானது ஜனநாயக விரோதத்துக்கு இதைவிட வேறொரு உதாரணம் வேண்டுமா? என்றும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

(ந-4,7)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டத்தில் 66 பேரை தெரிவு செய்வதற்கு

## 659 பேர் போட்டியிடவுள்ளனர்



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் மூன்று பிரதேச சபைகளிலும் 66 பேரை தெரிவு செய்வதற்காக 659 பேர் போட்டியிடவுள்ளதாக மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர் வே.சிவராஜா தெரிவித்துள்ளார்.

உள்ளூர் அதிகார சபை தேர்தல் 2025 இன் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை வேட்பாளர்களுடனான கலந்துரையாடல் நேற்று வெள்ளிக்கிழமை கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் வே.சிவராஜா தலைமையில் நடைபெற்றது.

இதன்போது இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவிக்கையில் இம்முறை கிளிநொச்சி மாவட்டத்தில் 102387 பேர் இந்த உள்ளூராட்சி தேர்தலில் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

கரைச்சி பிரதேச சபையில் 35 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக 342 பேர் போட்டியிடுவதாகவும் பச்சிலைபள்ளி பிரததேச சபையில் 13 பேரை தெரிவு செய்வதற்காக 128 பேர் போட்டியிடுவதாகவும் பூநகரி பிரதேச சபையில் 18பேரை தெரிவு செய்வதற்காக 189 பேர் போட்டியிடுவதாக தெரிவித்தார்.

(6-8-316)

# தேய்பிறை அட்டமி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தலையாழி அருள்மிகு சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ ஞான வைரவர் ஆலய தேய்பிறை அட்டமி உற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் அபிஷேகம், வசந்த மண்டபப் பூசைகளுடன் நெய்விளக்கேற்றலும் சகஷ்ரநாம அர்ச்சனையும் இடம்பெறும் என ஆலயப் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

(3-8)

# சுற்றுலாவிகளின் வருகை உயர்வு

## சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை



(கொழும்பு)

இம் மாதத்தின் முதல் 15 நாட்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகை முந்தைய ஆண்டைவிட 38 சதவீதம் அதிகரித்து 93,915 ஆக உயர்ந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகையின் அடிப்படையில் இந்தியா மற்றும் பிரித்தானியா முதல் இரண்டு இடங்களைப் பிடித்துள்ளது.

இந்தியாவிலிருந்து 18, 220 பேர் வருகை தந்துள்ளதுடன் பிரித்தானியாவிலிருந்து 11, 425 பேர் வருகை தந்துள்ளனர்.

அத்துடன், ரஷ்யாவிலிருந்து 8,705 பேர் வருகை தந்துள்ளனர்.

இந்த ஆண்டில் கடந்த 15 ஆம் திகதி வரை இலங்கைக்கு 816,191 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதுடன், இது கடந்த ஆண்டை விட 16 சதவீதம் அதிகமாகும் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

(6-8)









# இராசிபலன்

19.04.2025
சித்திரை 06, சனிக்கிழமை
சஷ்டி பிற்பகல் 2.54 மணிவரை

மூலம் முற்பகல் 7.18 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை

சந்திராஷ்டமம்- மிருகசீரிடம்

**வளவன்**

**மேஷம்** — சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், மறைமுகப் போட்டிகளை சமாளிப்பீர்கள், பயணங்கள் கைகூடும்.

**ரிஷபம்** — மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.

**மிதுனம்** — பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், கௌரவமான நாள்.

**கடகம்** — வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், சச்சரவை விட்டு சாதித்துக் காட்டும் நாள், வழிபாடு சிறப்பினைத் தரும், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள்.

**சிம்மம்** — பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் இடம்பெறலாம்.

**கன்னி** — பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், பயணங்களால் பலனுண்டு, பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும்.

**துலாம்** — உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை முடிக்க உறவினர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருச்சிகம்** — குடும்ப மகிழ்ச்சி கூடும், தேவையற்ற விவா தங்களைத் தவிர்ப்பது நல்லது, வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** — ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள்.


**மகரம்** — பயணங்களால் பிரபல மானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், தைரியத்தோடு செயற்பட்டு வாக்குறுதியைக் காப்பாற்றுவீர்கள்.

**கும்பம்** — பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு வழியமைத்துக் கொள்வீர்கள், வரு மானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மீனம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

தேவையானதை எல்லாம் வாங்காதே, தவிர்க்க முடியாததை வாங்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கிறீன் லேயர் சுற்றுச்சூழல் அமைப்பின் 10 000 நெல்லி மரக்கன்றுகளை நடுகை செய்யும் செயற்றிட்டத்தின் கீழ் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலக பிரிவில் நெல்லி மரக்கன்றுகளை வழங்கும் செயற்றிட்டம் கடந்த புதன்கிழமை காலை 10.30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் சண்முகராஜா சிவஸ்ரீ தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள் கலந்து கொண்டு நெல்லிமரக்கன்றுகளை வழங்கி வைத்தார்.

# அன்னை பூபதியின் நினைவேந்தல் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தியாகத் தாய் அன்னை பூபதியின் 37 ஆவது ஆண்டு நினைவேந்தலை முன்னிட்டு "நினைவெழுச்சி நாள்" நிகழ்வு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் கிளிநொச்சி மாவட்டப் பணிமனையில் இடம் பெறவுள்ளது. (நி-3-8)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

கருகம்பனை தமிழ் மன்றம் சனசமூக நிலையம் நடத்தும் 26 ஆவது இரத்ததான முகாமானது கருகம்பனை கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற் றுக்கிழமை முற்பகல் 9 மணி முதல் பிற்பகல் 3 மணிவரை கருகம்பனை கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள் ளனர். (நி-3-8)

# மனவளக்கலைமன்ற யோகா பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக்கலைமன்ற அறக் கட்டளையின் ஏற்பாட்டில் யாழ்ப் பாணம் அறிவுத் திருக்கோவிலில் இந்த வாரத்திற்கான மனவளக் கலைப்பயிற்சிகள் அறிமுகவுரை யுடன் இன்று மாலை 5 மணிக்கு இல.81 பிறவுண்வீதி யாழ்ப்பா ணத்திலுள்ள அறிவுத்திருக் கோவிலில் ஆரம்பமாகவுள்ளது.

சக்கரைநோய் கட்டுப்பட, ஆஸ்மா சளி தொல்லை நீங்க, இரத்த அழுத்தம் கட்டுப்பட, தூக்கம் சம்பந்தப்பட்ட பிரச்சினை தீர, தைராய்டு பிரச்சினை தீர எளிய முறை உடற்பயிற்சிகள், எளிய முறை குண்டலினி தியானப் பயிற்சிகள், உயிர் வளத்திற்கான காயகல்பப் பயிற்சிகள் வழங் கப்படும்.

பயிற்சிகளை தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்துள்ள மன வளக்கலை பேராசிரியர் சு.நித் தியஸ்ரீ அவர்கள் வழங்குவார் கள். தொடர்புகளுக்கு 076 857 1395. (நி-3,8)

# நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை எல் லைக்குள் அமைந்துள்ள நல் லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய் களுக்கு விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றுவதற்கு தீர்மா னிக்கப்பட்டுள்ளது.

எனவே இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி அறிவித் துள்ளார். (நி-3-8)

| திகதி | நேரம் | தடுப்புமருந்து ஏற்றப்படும் நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| 21.04.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | மூத்தவிநாயகர் சனசமூக நிலையம்<br>கச்சேரி நல்லூர் வீதி மூத்தவிநாயகர் கோவிலடி<br>ஆசீர்வாதப்பர் வீதி லக்கி ஸ்ரோர்ஸ் |
| 22.04.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | நாயன்மார் வீதி சந்தி<br>கடுக்காய் வீதி<br>வெயிலுகந்த பிள்ளையார் கோவிலடி |
| 23.04.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | ஆடியபாதம் வீதி வாழையம்மன் கோவிலடி<br>முத்தமிழ் முன்பள்ளி ஆடியபாதம் வீதி<br>செல்லர் வீதி சிறுவர் இல்லம் அருகாமை |
| 24.04.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | காசிப்பிள்ளை பாடசாலை அருகாமை<br>சங்கிலியன்மன்றம் பருத்தித்துறை வீதி<br>ஜமுனா வீதி |
| 25.04.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | செட்டியார் தோட்டம்<br>பண்டாரக்குளம் பிள்ளையார் கோவிலடி<br>கொண்டலடிச்சந்தி |
| 28.04.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | யாக்கோபு பாலர் பாடசாலை<br>குமார வீதி<br>சங்கிலியன் வீதி |
| 29.04.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | நல்லூர் குறுக்கு வீதி<br>செட்டித்தெரு நல்லூர்<br>கைலாசப்பிள்ளையார் கோவிலடி |
| 30.04.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | கோவில் வீதி இந்துமாமன்றம் ஒழுங்கை<br>வைமன் வீதி<br>துர்க்கா மணிமண்டபம் |
| 02.05.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | பருத்தித்துறை வீதி 4 ஆம் ஒழுங்கை<br>பருத்தித்துறை வீதி நாவலர் கல்வி நிலையம்<br>நாவலர் வீதி ஆனைப்பந்தி சந்தி |
| 03.05.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | ஜனசக்தி சனசமூக நிலையம் அரசடி வீதி<br>பழம் வீதி ஞானசோதி சனசமூக நிலையம்<br>சிவன் புதுவீதி |
| 04.05.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | சிவன் அம்மன் கோவிலடி<br>மணல்தரை வீதி<br>பலாலி வீதி ஆலடிச்சந்தி |
| 05.05.2025 | மு.ப. 9.00- மு.ப. 11.00<br>மு.ப. 11.00- பி.ப 01.00<br>பி.ப. 02.30-பி.ப 04.00 | அரசடி 5 ஆம் ஒழுங்கை<br>பலாலி வீதி ஜே / 103 கி.சே.அலுவலகம்<br>அம்மன் வீதி நல்லூர் |

# நினைவுப் பகிர்வு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி ஸ்ரீலஸ்ரீ ஞானப் பிரகாச முனிவர் ஞாபகார்த்தச் சபை நடத்தும் நினைவுப்பகிர்வு நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு திரு நெல்வேலி கலாமன்ற சனசமூக நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வாழ்த்துரையினை தெல்லிப்பளை துர்க்கை அம்மன் தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் நிகழ்த்தவுள்ளதுடன் நினைவுப்பகிர்வினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை தலைவர் கலாநிதி பொ.சந்திரசேகரம் ஆற்றவுள்ளார். (நி-3-8)




தென்மராட்சி-வரணி தென்னிந்திய திருச்சபை முன்பள்ளியின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு அண்மையில் முன்பள்ளியின் முகாமைத்துவ குழுத்தலைவர் அருட்பணி அன்ரனிராஜ் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றிருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக் காய்ச்சல் பரவும் அபாயம்

# சுகாதார தரப்பு எச்சரிக்கை

(கொழும்பு)


**நாட்டில் எலிக்காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்துள்ளனர்.**



விசேடமாகப் புத்தாண்டுக் காலப்பகுதியில் வயல்வெளிகளுக்கு அருகில் புத்தாண்டுக் கொண்டாட்ட நிகழ்வுகளில் கலந்து கொண்டவர்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காய்ச்சல், தலைவலி, தசை உளைவு, மூட்டுகளில்வலி, சரும எரிச்சல் போன்றவற்றுடன் வாந்திபேதி, தசை வீக்கம் என்பனவும் எலிக்காய்ச்சலின் ஆரம்ப அறிகுறிகளாகும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது. இவ்வாறான அறிகுறிகள்தென்பப்பால்உடனடியாக வைத் தியரை நாட வேண்டும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (நி-8)

# மின்ஒழுக்கினால் வீட்டு உபகரணங்கள் சேதம்



(சாவகச்சேரி)

கொடிகாமம் கெற்பேலி மேற்குப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரவு ஏற்பட்ட மின் ஒழுக்கினால் வீட்டு உபகரணங்கள் சில தீக்கிரையாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருப்பினும் மேற்படி அசம்பாவிதத்தின் போது உயிர்ச்சேதங்களோ-பாரிய உடைமை இழப்புக்களோ ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (6-8-30)

# 227 தபால்மூல வாக்குச்சீட்டுகள் இதுவரை விநியோகம்-தேர்தல் ஆணையம்

(கொழும்பு)

அனைத்து தபால் வாக்குச் சீட்டுகளும் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்கப்படும் என்று தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

இதுவரை 227 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் மூல வாக்குச் சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 112 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் மூல வாக்குச் சீட்டுகள் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும்தேர்தல்ஆணையத் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க கூறியுள்ளார். (நி-8)

# கடவுச்சீட்டு தரவரிசையில் இலங்கைக்கு 168 ஆவது இடம்

(அபுதாபி)

உலகின் சிறந்த கடவுச்சீட்டுகளுக்கான தரவரிசையில் இலங்கை 171 ஆவது இடத்திலிருந்து 2025 ஆம் ஆண்டில் 168 ஆவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக துபாயை தளமாகக் கொண்ட உலகளாவிய ஆலோசனை நிறுவனமான நோமட் கெபிட்டலிஸ்ட் அறிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியிலுள்ள நாடுகளின் கடவுச்சீட்டுகள் விசா இல்லாத பயணம், வரிவிதிப்பு, உலகளாவிய கருத்து, இரட்டை குடியுரிமை சாத்தியம் மற்றும் தனிப்பட்ட சுதந்திரம் ஆகிய விடயங்களை அடிப்படையாகக் கொண்டு இந்தத் தரப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது.

கடவுச்சீட்டு தரவரிசையில் அயர்லாந்து முதலிடத்தில் உள்ளதுடன், சுவிட்சர்லாந்து மற்றும் கிரேக்கம் இரண்டாவது இடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன.

உலகளாவிய கருத்து என்ற பிரிவில் இலங்கை 30 புள்ளிகளைப் பெற்றுள்ளது.




இந்த அளவீட்டில் 50 இற்கும் குறைவான புள்ளிகளைப் பெறும் நாடுகள் பெரும்பாலும் தங்கள் குடிமக்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும்போது உள்ளூர் மக்களிடமிருந்து எதிர் மறையான வரவேற்பை எதிர்கொள்கின்றனர் என நோமட் கெபிட்டலிஸ்ட் கூறுகிறது.

தரவரிசையில் சிறிது முன்னேற்றம் இருந்தபோதிலும், உலகளாவிய கடவுச்சீட்டு வலிமையின் அடிப்படையில் இலங்கை சக பிராந்திய நாடுகளை விடவும் தொடர்ந்தும் பின்தங்கியுள்ளதாக நோமட் கெபிட்டலிஸ்ட் தெரிவித்துள்ளது. (6-8)

# 52 கிராம் கஞ்சாவுடன் யாழில் இருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - தாட்டாதெருச் சந்தியில் வைத்து 52 கிராம் கஞ்சாவுடன் இரண்டு இளைஞர்கள் நேற்றைய தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தகட்கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள்இருவரும் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வைத்து விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் அந்நபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (6-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1992- இந்து<br>நட்சத்திரம்: பூராடம்<br>கி.பா: 32<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: HNDA, BBA கணக்குப்பதிவாளர்<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15334 | பிறப்பு: 1997 -இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: 16 1/2<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: Nurse(Gov)<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15379 |
| பிறப்பு:1992-இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி<br>உயரம்:5'4"<br>தகைமை/தொழில்: A/L, BCT<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15335 | பிறப்பு: 2000- இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 32<br>உயரம்: 5'1"<br>தகைமை/தொழில்: ICT Diploma<br>எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்<br>தொ.இ: G/15382 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 2இல் செவ்<br>கி.பா: 26<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: HND, TO<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: B/15336 | பிறப்பு: 1999 இந்து<br>நட்சத்திரம்: மூலம்<br>கி.பா: 05<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc(Final year)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: G/15383 |


இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ஏமன் எண்ணெய்த் துறைமுகம் மீது அமெரிக்கா தாக்குதல்

### 38 பேர் பலி



(ஏமன்)

ஏமனின் பாரிய செல்வமாக விளங்கும் ராஸ் இஸ்ஸா எண்ணெய்த் துறைமுகத்தை நேற்று முன்தினம் வியாழக் கிழமை அமெரிக்கா தாக்கியழித்துள்ளது. இதில் 38 பேர் கொல்லப் பட்டுள்ளதோடு, 102 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈரான் ஆதரவாளர்கள் மீது அமெரிக்கா ஆரம் பித்த தாக்குதல்களில் மிகவும் கொடிய தாக்குதல் இதுவாகும்.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செங்கடல் கப்பல் போக்குவரத்து மீதான தாக்குதல்களை நிறுத்தாவிட்டால் நாமும் நிறுத்த மாட்டோம். ஜனவரி மாதம் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றதிலிருந்து கடந்த மாதம் மத்திய கிழக்கில் மிகப் பெரிய இராணுவ நடவடிக்கையாக ஆரம்பிக்கப்பட்ட பாரியளவிலான தாக்குதல்களை நிறுத்த மாட்டோம் என அமெரிக்கா சபதம் செய்துள்ளது.

இந்தத் தாக்குதல் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு எரிபொருளை துண்டிப்பதற்காக தாக்குதல் நடத்தப்பட்டதாக அமெரிக்க இராணுவம் குறிப்பிட்டுள்ளது. (நி-8)

## அனைத்து பணய... விடுவிக்கத் தயார்!

(ஜெருசேலம்)

**"காசா போரை முடிவுக்கு கொண்டு வர மீதமுள்ள பணயக்கைதிகள் அனைவரையும் விடுவிக்கத் தயார்" என ஹமாஸ் தெரிவித்துள்ளது.**

பாலஸ்தீனத்தின் காசா பகுதியை கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் பயங்கரவாதிகள், மேற்காசிய நாடான இஸ்ரேலுக்குள் நுழைந்து, 2023 ஒக்டோபரில் தாக்குதல் நடத்தினர். இதில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். 200 பேரைப் பணயக் கைதிகளாக் கடத்திச் சென்றனர்.

இதற்குப் பதிலடியாக 15 மாதங்களாக இஸ்ரேல் நடத்திய தாக்குதலில், காசாவில் 48,000இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அமெரிக்கா மற்றும் ஐ.நாவின் முயற்சியால் இரு தரப்பிற்கும் இடையே கடந்த ஜூன் 19 முதல் 42 நாட்களுக்கு முதற்கட்டப் போர் நிறுத்த ஒப்பந்தம் அமுல் செய்யப் பட்டது.

அப்போது, இரு தரப்பிலும் பிடித்து வைக்கப் பட்டிருந்த பணயக் கைதிகள் சிலர் விடுவிக்கப்பட்டனர். கைது செய்யப்பட்டு உயிரிழந்தவர்களின் உடல்களும் ஒப்படைக்கப்பட்டன. இருப்பினும், போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறியதாக இருதரப்பும் குற்றம் சாட்டின. காசா நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இஸ்ரேல் அவ்வப்போது வான்வழித் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில், "காசா போரை முடிவுக்கு கொண்டு வர மீதமுள்ள பணயக் கைதிகள் அனைவரையும் விடுவிக்கத் தயார்" என ஹமாஸ் தெரிவித்துள்ளது. இது குறித்து ஹமாஸ் அமைப்பின் மூத்த தலைவர் கலீல் அல் ஹயா

## கேபிள் கார் அறுந்து விழுந்து விபத்து; இத்தாலியில் 4 பேர் பரிதாப பலி



(வத்திக்கான்)

இத்தாலியில் கேபிள் கார் அறுந்து விழுந்து விபத்து ஏற்பட்டதில், சுற்றுலாப் பயணிகள் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.

இத்தாலியில் உள்ள நேப்பிள்ஸ் விரிகுடா மற்றும் வெசுவியஸ் மலை காட்சிகளுக்காக கேபிள் கார் அமைக்கப்பட்டு இருந்தது. தற்போது அங்கு சீசன் என்பதால் கேபிள் கார் சேவை கடந்த வாரம் தொடங்கப்பட்டது.

இந்நிலையில், நேப்பிள்சுக்கு தெற்கே மான்டேபைட்டோவுக்கு சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச் சென்ற கேபிள் காரில், கேபிள் அறுந்து விழுந்து விபத்து ஏற்பட்டதில் 4 பேர் உயிரிழந்தனர். மேலும் ஒருவர் காயம் அடைந்தனர்.

விபத்து குறித்து தகவல் அறிந்த மீட்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

நீண்ட நேரம் போராடி மீட்புப் பணியை மேற்கொண்டனர்.

தற்போது கேபிள் கார் சேவை நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. (நி-8)

## கொலம்பியாவில் மஞ்சள்... 34 பேர் உயி...

### அவசர நிலை பிரக...




(கொலம்பியா)

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் மஞ்சள் காய்ச்சலால் 34 பேர் உயிரிழந்ததை அடுத்து, நாடு தழுவிய சுகாதார அவசரநிலை அறிவிக்கப் பட்டுள்ளது.

கடந்த ஆண்டு தொடக்கம் முதல் மஞ்சள் காய்ச்சல் வேகமாகப் பரவுகிறது. இது ஏடிஸ் மற்றும் ஹேமகோகஸ் வகை கொசுக்களால் பரவும் ஒருவகை வைரஸ் நோய் ஆகும். இதுவரை இந்தக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 74 பேரில் 34 பேர் உயிரிழந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...க் கைதிகளையும் ... - ஹமாஸ் அறிவிப்பு



கூறியதாவது: அரசியல் காரணங்களுக்காகத் தற்காலிக போர் நிறுத்தங்களை இஸ்ரேல் கையில் எடுக்கிறது.

இதற்கு இனி ஹமாஸ் ஒப்புக்கொள்ளாது. போரை முழுமையாக முடிவுக்கு கொண்டு வர இஸ்ரேல் ஒப்புக்கொண்டால் மட்டுமே மீதமுள்ள பணயக் கைதிகள் 59 பேரை விடுவிப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

இதற்கு இஸ்ரேல் ஒப்புக் கொள்ளும் பட்சத்தில் ஹமாஸுக்கு எதிரான காசாவின் போர் விரைவில் முடிவுக்கு வரும் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-8)

# 30 நாடுகளிலுள்ள தூதரகங்களை மூடுவதற்கு ட்ரம்ப் நடவடிக்கை

(வோஷிங்டன்)

30 நாடுகளிலுள்ள தூதரகங்கள் மற்றும் துணைத் தூதரங்களை மூடுவதற்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தின் தேவையற்ற செலவுகளைக் குறைக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அவற்றுள் மற்றும் 17 துணைத்தூதரகங்கள் அடங்குகின்றன.


ஐரோப்பா, ஆபிரிக்கா மற்றும் ஆசியாவில் உள்ள சில தூதரகங்களும் இதில் அடங்குவதாகச் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

சோமாலியா, ஈராக், மோல்டா லக்சம்பர்க் கொங்கோ, மற்றும் தெற்கு சூடான் உள்ளிட்ட சில நாடுகளும் குறித்த பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளன.

பிரான்சில் அமெரிக்காவுக்கான ஐந்து தூதரகங்கள் உள்ள நிலையில், அவற்றையும் மூடுவதற்கு எதிர்பார்த்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், ஜேர்மன் மற்றும் போஸ்னியாவில் உள்ள இரண்டு தூதரகங்கள், பிரித்தானியாவில் உள்ள ஒரு தூதரகம் ஆகியவற்றையும் மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூடப்பட்ட தூதரகங்களின் பணிகளை அண்டை நாடுகளில் உள்ள தூதரகங்கள் ஊடாக முன்னெடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-8)



# ...ள் காய்ச்சல் ...ரிழப்பு ...கடனம்

மேலும் அங்குள்ள டோலிமா பிராந்தியத்தில் 22 பேருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

எனவே மஞ்சள் காய்ச்சலைக் கட்டுப்படுத்த நாடு முழுவதும் சுகாதார அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சமயத்தில் பல கொலம்பியர்கள் வெப்பமான பகுதிகளுக்குச் செல்கிறார்கள். அங்கு நோயைப் பரப்பும் கொசுக்கள் அதிகமாக உள்ளன.

அதிக ஆபத்துள்ள பகுதிகளுக்குச் செல்பவர்கள் தடுப்பூசி போட்டதற்கான ஆதாரத்தைக் காட்டவேண்டும் என்று சுகாதார அமைச்சர் கில்லர்மோ அல்போன்சோ ஜரா மில்லோ கூறினார். இலவசமாக வழங்கப்படும் இந்த தடுப்பூசியை மக்கள் செலுத்திக் கொள்ளுமாறு அவர் வலியுறுத்தினார். (நி-8)

# தலிபான் மீதான தடையை நீக்கியது ரஷ்ய நீதிமன்றம்

(மொஸ்கோ)

இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் பயங்கரவாத அமைப்பாகப் பெயரிடப்பட்ட தலிபான் மீதான தடையை ரஷ்யாவின் உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் நீக்கியது.

அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளை திரும்பப் பெற்றதைத் தொடர்ந்து 2021 ஒகஸ்ட் மாதம் ஆப்கானிஸ்தானில் அதிகாரத்தைக் கைப்பற்றிய தலிபான், இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக ரஷ்யாவில் ஒரு பயங்கரவாத அமைப்பாக வகைப்படுத்தப்பட்டிருந்தது.

நாட்டின் மீது அதன் கட்டுப்பாடு இருந்தபோதிலும், மனித உரிமைகள், நிர்வாகம் மற்றும் பயங்கரவாத எதிர்ப்பு தொடர்பான சர்வதேச உறுதிமொழிகளை நிறை வேற்றத் தவறியதால், தலிபான் தலைமையிலான நிர்வாகத்தை எந்த நாடும் முறையாக அங்கீகரிக்கவில்லை.

இந்த நிலையில், ரஷ்ய நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பு, 2003 ஆம் ஆண்டு மொஸ்கோவின் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்கப்பட்ட தலிபான்களுக்கு ஒரு இராஜதந்திர வெற்றியாகும்.

முன்னாள் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் 10 ஆண்டு காலப் போரை நடத்தியது, இது 1989 இல் மொஸ்கோ தனது படைகளைத் திரும்பப் பெற்றதுடன் முடிந்தது.

எனினும், ஆப்கானிஸ்தானை நிலைநிறுத்த உதவுவதற்காக தலிபான்களுடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை ரஷ்ய அதிகாரிகள் அண்மையில் வலியுறுத்தி வருகின்றனர்.

அண்மைய ஆண்டுகளில், மத்திய ஆசிய நாடுகளான கஜகஸ்தான் மற்றும் கிர்கிஸ்தான் ஆகியவை தலிபான்களை பயங்கரவாதக் குழுக்களின் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளன.

2021 ஆம் ஆண்டு மீண்டும் ஆட்சிக்கு திரும்பியபோது 1996 முதல் 2001 வரையிலான முதல் ஆட்சிக் காலத்தை விட மிகவும் மிதமான ஆட்சியை வழங்குவதாக தலிபான்கள் உறுதியளித்தனர்.

ஆனால், 2021 கையகப்படுத்தலுக்குப் பின்னர் பெண்கள் மீது கட்டுப்பாடுகளை அமுல்படுத்தத் தொடங்கினர்.

பூங்காக்கள், குளியலறைகள் மற்றும் உடற்பயிற்சிக் கூடங்கள் உள்ளிட்ட பெரும்பாலான பொது இடங்களில் பெண்கள் தடை செய்யப்பட்டுள்ளனர்.

அதேநேரத்தில், பெண்கள் ஆறாம் வகுப்புக்கு மேல் கல்வி கற்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகள் தலிபான்களை உலக அரங்கில் தனிமைப்படுத்தியுள்ளன.

இருப்பினும் அவர்களின் அரசாங்கம் சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உள்ளிட்ட நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை ஏற்படுத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேருந்து சேவைகள் தொடர்பில் 187 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

புத்தாண்டு காலப்பகுதியில் இடம் பெற்ற விசேட பேருந்து சேவைகள் தொடர்பாக 187 முறைப்பாடுகள் பயணிகளிடம் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அவற்றில் 63 முறைப்பாடுகள், அங்கீகரிக்கப்பட்ட கட்டணங்களுக்கு மேலதிகமாக பணம் அறவிட்டமை தொடர்பானவையாகும். விநியோகிக்காமை போன்ற குற்றச் சாட்டுகளும், பேருந்து சேவை தொடர்பான முறைப்பாடுகளைத் தெரிவிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள 1955 என்ற அவசர இலக்கத்துக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பாக உரிய விசாரணைகள் இடம் பெறும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் உறுதி யளித்துள்ளார். (6-8)

# தனியார் பேருந்து - முச்சக்கரவண்டி மோதி விபத்து; 6 பேர் காயம்

(கொழும்பு)

அதிவேகமாகப் பயணித்த முச்சக்கர வண்டியொன்று தனியார் பேருந்து ஒன்றுடன் மோதியதில் ஏற்பட்ட விபத்தில் ஆறு பேர் காயமடைந்து டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.00 மணியளவில், ஹற்றன் - மஸ்கெலிய பிரதான வீதியில் டிக்கோயா நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளதென ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்துத் தொடர்பாக பேருந்தின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா பகுதில் இருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற தனியார் பேருந்து ஒன்று டிக்கோயா நோக்கி வந்த முச்சக்கர வண்டியுடன் மோதி யதில் இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ள தாகப் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்த பாடசாலை மாண வர் உட்பட மூன்று பேர் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். (6-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 450 | 400 | 450 | 400 |
| உருளைக்கிழங்கு | 150 | 190 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 600 | 400-500 | 500 |
| தக்காளி | 500 | 500 | 700 | 350 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 290 | 280 | 250-300 | 200 |
| கோவா | 350 | 300 | 350 | 300 | 400 |
| கரட் | 600 | 600 | 600 | 500 | 600 |
| பூசணி | 250 | 120 | 300 | 240 | 250 |
| புடோல் | 200 | 250 | 250 | 200 | 400 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 160 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 300 | 150-250 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 160 | 150 | 160 |
| பாகற்காய் | 500 | 500 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 300 | 350 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 400 | 300 | 250 | 320 |
| பயற்றங்காய் | 150 | 250 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 280 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | 450 | 320 | 500 |
| கறிமிளகாய் | 600 | 550 | 600 | 450 | 600 |
| முருங்கைக்காய் | -- | 3000 | 2000 | 2500 | 2500 |
| போஞ்சி | 400 | 400 | 800 | 450 | 500 |
| கத்தரிதம்புள்ள | 450 | 400 | 350 | -- | 350 |
| கீரை – 1 பிடி | 120 | 80-130 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 250 | 150 | 200 | 100 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 250 | 280 | 150 | 150-220 | 200-250 |
| இராசவள்ளி | 600 | 650 | 600 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 200 | -- | 400 | -- | 600 |
| முள்ளங்கி | 100 | 150 | 200 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | -- | 100 | -- | 200 |

# இன்று ஒரு தகவல் 360



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பக்தியின் எல்லை

உனக்காக நான் என்ன வேண்டுமானாலும் செய்வதற்குத் தயாராகி இருக்கின்றேன் என்றார் ஒருவர். சரி வேறு ஒன்றும் வேண்டாம். ஒரு பத்து ரூபாய் பணம் இருந்தால் கைமாறாகக் கொடு. நாளைக்கு தருகின்றேன் என்றார் இன்னொருவர் அவ்வளவுதான். நான் அவசரமாக ஒருவரைப்பார்க்க வேண்டியிருக்கிறது. அதன்பிறகு வந்து உன்னைப் பார்க்கின்றேன் என்று சொல்லிவிட்டு அந்த நபர் சென்று விட்டார்.

இதுதான் இன்றைக்கு உலக நிலவரம். ஆனால் ஒருவன்மேலே உண்மையாகவே அன்பு செலுத்துவது என்பது பெரிய விடயம். பக்தி செலுத்துவது என்பது அதைவிடப் பெரிய விடயம். பக்தி என்றால் ஏதோ கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கி வருவது இல்லை. பக்தியின் எல்லை எது என்று தெரிவதற்கு உங்களுக்கு ஆசையா? அப்படி என்றால் இந்தக் கதையை கேளுங்கள். மயூரசர்மா என்று ஒருவன் இருந்தான். கிருஷ்ணர் மேல் அவன் மிகவும் பக்தியாக இருந்தான். ஒருநாள் கிருஷ்ணர் அவனைப் பார்த்துவிட்டு போகலாம் என்று வந்தார். கிருஷ்ணரைப் பார்த்தவுடனே அவனுக்கு மிகவும் மகிழ்ச்சி.வழக்கமாக பக்தர்கள் தானே பகவானிடம் ஏதும் கேட்பார்கள். இங்கே பகவான் பக்தனைப் பார்த்து கேட்டார். இதோ பார் உன்னிடம் நான் ஒன்று கேட்பேன். கொடுப்பாயா என்றார். பக்தன் மாட்டேன் என்றா சொல்லுவார். நீங்கள் என்ன கேட்டாலும் அதைக் கொடுப்பதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்றான் மயூரசர்மன்.

உன்னுடைய மகன் ஒருவன் இருக்கின்றான் ஐந்து வயதில். அவன் தான் எனக்கு வேண்டும் என்றார். அவன் கொஞ்சம் கூடத் தயக்கம் இன்றி சரி தருகின்றேன் என்று சொல்லிவிட்டான். கிருஷ்ணர் பார்த்தார். அவன் உடல் முழுவதும் எனக்குத் தேவையில்லை. அவன் உடலின் வலது பக்கம் மட்டும் போதும் என்றார். அதற்கும் சரி அப்படியே கொடுக்கின்றேன் என்றார். அந்தச் சின்னப் பையனை நிற்க வைத்து அவன் தலையில் இருந்து ஒரு ரம்பத்தாள் அறுக்க வேண்டும். அப்பொழுது தான் இரண்டு பாகமாக ஆக்க முடியும் என்றார்.

சரி அப்படியே செய்யலாம் என்றான். அந்த ரம்பத்தை நீ ஒரு பக்கமும் உன் மனைவி ஒரு பக்கமும் பிடித்து அறுத்து அவனை இரண்டு துண்டாக்க வேண்டும் என்றார். அதற்கும் சரி என்றான். அப்படிச் செய்கின்ற போது நீ அழக்கூடாது உன் மனைவியும் அழக்கூடாது என்றார். சரி என்றான். உன் மகனும் அழக்கூடாது என்றார். அதற்கும் சரி என்று சம்மதித்தார். இவ்வளவு நிபந்தனைகளின் பெயரிலேதான் உன் மகனுடைய வலது பாகத்தை நான் ஏற்றுகொள்கிறேன். இல்லை என்றால் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்று சொல்லிவிட்டார் அவர்.

உங்களுடைய அத்தனை நிபந்தனைகளுக்கும் கட்டுப்பட்டு நாங்கள் நடக்கின்றோம் என்று சொல்லி விட்டான் மயூரசர்மன். உடனே மகனை அழைத்தான். அவன் வந்து நின்றான். அவனை குளிப்பாட்டினான். புது ஆடைகளை அணிவித்தான். அதன்பின் ஒரு ரம்பத்தை எடுத்து அறுக்க ஆரம்பித்தான். ஒரு பக்கம் அவன் இன்னொரு பக்கம் அவன் மனைவி. நடுவிலே அந்தப் பையன் அவர்கள் இரண்டு பேர் கண்களிலும் கண்ணீர் கொஞ்சம் கூட வரவேயில்லை. ஆனால் அந்தப் பையனின் இடது கண்ணில் இருந்து மட்டும் கண்ணீர் வழிய ஆரம்பித்தது. இதைக் கிருஷ்ணர் பார்த்துவிட்டார்.


என்னுடைய நிபந்தனைப்படி நீங்கள் நடந்துகொள்ளவில்லை. அதனால் உங்கள் பையனுடைய வலதுபாகம் எனக்கு வேண்டாம் என்றார். நாங்கள் இரண்டு பேரும் அழவில்லை என்றான் மயூரசர்மன். நீங்கள் அழவில்லை சரி ஆனால் உங்கள் பையனுடைய இடது கண் மட்டும் அழுகின்றதே என்றார். உடனே அந்தச் சின்னப் பையன் என்ன சொன்னான் தெரியுமா? என் உடலோடு வலது பாகத்தை மட்டும் தானே பகவான் கேட்டார். வலது பாகம் செய்த புண்ணியத்தை இடது பாகம் செய்யவில்லை. அப்படி என்று நினைத்து இடது கண் அழுது கொண்டு இருக்கின்றது என்றான். உடனே கிருஷ்ணர் கண்களிலே கண்ணீர் வர ஆரம்பித்து விட்டது. அந்தப் பையனை அணைத்துக் கொண்டார். அவன் பழைய மாதிரி முழுவதுமாக ஆகிவிட்டான். இதுதான் பக்தியின் எல்லை என்று விளக்கம் கொடுத்தார் ஒரு ஆன்மீகப் பேச்சாளர். பக்தியின் எல்லையைப் புரிவதற்காக இந்தக் கதை நீங்கள் உடனே பகவான் இப்படி எல்லாம் வந்து நின்று பையனை வெட்டிக் கொடு என்று கேட்பாரா? என்று கற்பனை செய்துகொண்டு இருக்காதீர்கள். ஆன்மிக விடயங்களை ஆன்மிக நோக்கத்திலேயே புரிந்துகொள்ள வேண்டும் அதுதான் முக்கியம். பக்தியின் அளவைப் புரிந்துகொள்ள ஒரு உதாரணம் சொல்கின்றேன்.

நான் செய்யும் வியாபாரத்தில் இன்று எனக்கு ஆயிரம் ரூபாய் இலாபம் கிடைத்தது என்றால் அதில் 500 ரூபாயை உன் கோவிலுக்கு வந்து உண்டியலில் போடுகின்றேன் என்று வேண்டினார். வியாபாரம் செய்தார். 1000 ரூபாய் கிடைக்கவில்லை 500 ரூபாய் இலாபம் கிடைத்தது. அவர் அதன்பின் கோவிலுக்குச் செல்லவில்லை. எனக்குக் கிடைத்த 500 ரூபாவில் பாதியை உண்டியலில் போடுகிறேன் என்றுதானே சொன்னேன். அவர் என்னை முறைத்துப் பார்த்தார். விபரம் தெரியாமல் பேசாதீர்கள். கடவுள் ஏற்கனவே அவர் பங்கு 500 ரூபாயை எடுத்துக் கொண்டு மீதி 500 ரூபாவை எனக்கு கிடைக்கின்ற மாதிரி செய்துள்ளார். அதனால் இது எனக்கு சேர வேண்டிய பங்கு என்றார். இவரின் பக்தியுடைய எல்லை எந்த அளவில் இருக்கிறது பார்த்தீர்களா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நுகர்விற்கு ஒவ்வாத உணவுகள் மீட்கப்பட்டு அழிப்பு

## மாங்குளத்தில் மூடப்பட்ட உணவகம்



(நெளுக்குளம்)

மாங்குளம் பகுதியில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகம் ஒன்று மூடப்பட்டுள்ளதுடன் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உணவுகள் இனங் காணப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாங்குளம் பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவில் உள்ள உணவகங்களில் நேற்று ஒட்டுசுட்டான் வைத்திய அதிகாரிகள் மற்றும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் இணைந்து திடீர் பரிசோதனை நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

குறித்த நடவடிக்கையின் போது மாங்குள பகுதியில் சுகாதார சீர்கேடுகளுடன் இயங்கிய உணவகம் மூடப்பட்டதுடன். மனித நுகர்விற்குப் பொருத்தமற்ற உணவுகள் இனங் காணப்பட்டு உடனடியாக அழிப்பு செய்யப்பட்டன. மூடப்பட்ட உணவகங்களில் இனங் காணப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் வரை 10 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

அத்துடன் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படாமல் போனால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் உணவக உரிமையாளர்களுக்கு எச்சரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-299)

# 'உள்ளக அலுவல்கள் அலகு' முல்லை மாவட்ட செயலகத்தில் திறப்பு



(முல்லைத்தீவு)

உள்ளக அலுவல்கள் அலகு எனும் பிரிவானது முல்லைத்தீவு மாவட்ட செய லகத்தில் கடந்த புதன் கிழமை முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அ.உமாமகேஸ்வரனி னால் திறந்து வைக்கப் பட்டது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் எண்ணக் கருவில் உருவாகிய நேர்மையான இலங்கையினை உருவாக்குவதற் காக இலஞ்சம் மற்றும் ஊழலினை முற்றாக ஒழிக்கும் செயற்றிட்டமான இலங்கையின் ஊழலை ஒழிக்கும் செயற்பாடு திட்டத்தினை மாவட்ட மட்டத்தில் செயற்படுத்துவதற்கான ஆரம்ப கட்டமாக பொதுமக்கள் மற்றும் அரச உத்தியோகத் தர்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை மாவட்ட செயலாளரிடம் முறையிடுவதற்கு குறித்த பிரிவானது திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் ஆரம்பிக்கப் பட்டுள்ள இப் பிரிவின் இணைப்பாளராக மேலதிக மாவட்ட செயலாளர் எஸ்.குணபாலன் (நிர்வாகம்), நேர்மைத்திறன் அலுவலராக நிர்வாக உத்தியோகத்தர் மற்றும் பதவி நிலை உத்தியோகத்தர்கள் உட்பட அனைத்து தர நிலையினை சேர்ந்த உத்தியோகத்தர்கள் அடங் கிய குழுவினர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பாக கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகளை விசாரணை செய்து மேலதிக நடவடிக்கைக்காக பரிந்துரை செய்வார்கள்.

அதேவேளை பொது மக்கள் ஊழல் மற்றும் இலஞ்சம் தொடர்பான முறைப் பாடுகளினை நேரடி யாகவோ அல்லது 021 229 0036 என்ற தொலைபேசி ஊடாகவோ அல்லது gamullaitivu@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாகவோ முறையிட முடியும். (6-8-299)



கிளிநொச்சி நகரில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர், வேட்பாளர்கள் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(படம்- தேவானந்தன்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3325

### லில்லி

விழுந்தால் தூக்கிவிட யாரும் இல்லை என்பதை உணர்ந்தவர்களே



தான் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் யோசித்து வைக்கின்றார்கள்

### மிதுன்

வாஸ் பேசின்ல மனைவி பாத்திரம் கழுவிட்டு இருக்கும் போது



அப்படியே நம்ம சாப்பிட்ட தட்டையும் அந்த சிங்க்ல போடும் போதும்....

### கோபிகா

கஷ்டப்பட்டாவது வாழ்க்கையில் முன்னுக்கு வரலாம் என்று நினைக்கும் போது



ஏதாவது ஒரு கஷ்டம் முன்னுக்கு வருது....

### மேரி லூயிஸ்

குடித்துவிட்டு வந்த கணவன்,
மனைவியின் திட்டை
சமாளிக்க மடிக்கணினியை
எடுத்துகொண்டு வேலை செய்ய
துவங்கினான்....
மனைவி : குடிச்சீங்களா?
கணவன் : இல்லம்மா!
மனைவி: "குடிகார பயலே" அப்புறம்
ஏன் சூட்கேசை தொறந்து
வெச்சு டைப் பண்ணிட்டு இருக்க...

### அருண்


வாழ்வின் முக்கியமான மூன்று தத்துவங்கள்



யாரையும் எதிர்பார்க்காதீர்கள்
யாரையும் நம்பாதீர்கள்
யாரிடமும் தங்கி வாழாதீர்கள்...!

### லோகேஷ்

இப்ப சொல்லு.. 2010 ஆம் வருடம் என்ன செய்துகொண்டு இருந்தீர்கள்
அப்ப.. அப்ப.. எங்க அம்மா பாத்திரம் விளக்கிட்டு இருந்தாங்க
அப்பா டிவி பார்த்துக்கொண்டு இருந்தாரு




2025 ஆம் வருடம் வாங்க
இப்போது நீங்கள் என்ன செய்றீங்கள்
இப்ப.. பாத்திரம் விளக்கிட்டு இருக்கிறேன்
டிவில என் பொண்டாட்டி சீரியல் பார்த்திட்டு இருக்கா

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 752





றிருந்து அரசு புரிய ஆசைப் படுகிறவர்கள் பகைவர்களை யும் சதிகாரர்களையும் கொன் றுதான் ஆக வேண்டும். சக் கரவர்த்தியாயிருந்து உலகை ஒரு குடை நிழலில் ஆளப் பிறந்தவர்கள் பகையரசர் களைக் கொன்றுதான் தீர வேண்டும். இராஜாளி புறா வைக் கொல்லாவிட்டால், அது இராஜாளியாயிருக்க முடியுமா? இதைப் பற்றி ஏன் உனக்கு இவ்வளவு கலக்கம்?" என்றார் மலையமான்.

"தாத்தா! நீங்கள் சொல்வ தெல்லாம் சரிதான் ஆனால் அந்தப் பெண் புறா அப்படித் தவிப்பதைப் பார்த்த பிறகு இராஜாளிக்கு இரக்கம் வர வேண்டாமா? பெண்ணுக்கு இரங்கி ஆணை விடுதலை செய்ய வேண்டாமா? ஐயா! நீங்களே சொல்லுங்கள், உங் கள் பகைவன் ஒருவனை நீங் கள் கொல்லப் போகும் சம யத்தில் அவனுடைய காதலி குறுக்கே வந்து புருஷனுக்கு உயிர்ப்பிச்சை கேட்டால் என்ன செய்வீர்கள்? அப்போது உங்கள் மனம் இரங்காமலி ருக்குமா?" என்று கரிகாலன் கேட்டான்.

"அப்படி ஒரு பெண் குறு க்கே வந்தால் அவளை என் இடது காலினால் உதைத்து விட்டு என் பகைவனைக் கொல் லுவேன். கரிகாலா! அதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. பகைவர்கள் 'தொழுத கையி னில்' ஆயுதம் வைத்திருப் பார்கள் என்றும், அவர்கள் 'அழுத கண்ணீரிலும்' ஆயு தம் மறைந்திருக்கும் என்றும் வள்ளுவர் கூறியிருக்கிறார்.

ஆண்களின் கண்ணீரைக் காட்டிலும் பெண்களின் கண்ணீர் அபாயமானது. ஏனெனில் பெண்களின் கண் ணீருக்கு இளகச் செய்யும் சக்தி அதிகம் உண்டு. அப் படி மனத்தை இளகவிட்டு விடுகிறவனால் இவ்வுலகில் பெரிய காரியம் எதையும் செய்ய முடியாது அவன் பெண்களிலும் கேடு கெட்ட வனாவான்!"

"தாத்தா! இது என்ன? பெண் களைப் பற்றி ஏன் நீங்கள் இவ்வளவு குறைவாகப் பேசு கிறீர்கள்? பெண்களைப் பற் றிக் குறைவாய்ப் பேசுவது என் தாயாரையும் குறைவு படுத்துவதாகாதா?"

"குழந்தாய்! கேள்! உன் தாயாரிடம் நான் வைத்தி ருந்த அன்புக்கு இந்த உலகத் தில் இணை ஒன்றுமே இல்லை. எனக்கு ஆறு பிள்ளைகள் பிறந்தார்கள். பீமனையும், அர்ச்சுனனையும் ஒத்த வீரர் களாய் வளர்ந்தார்கள். அவ் வளவு பேரையும் யுத்தகளத் தில் பலி கொடுத்துவிட் டேன். அவர்கள் இறந்த செய்தி வந்தபோதெல்லாம் நான் வருத்தப்படவில்லை.

ஆனால் உன் தாயாரை மணம் செய்து கொடுத்து அனுப்பி வைத்தபோது அவள் சாம்ராஜ்ய சிங்காசனத்தில் அமரப் போகிறாள் என்று தெரிந்திருந்தும் என் மனம் அடைந்த வேதனையைச் சொல்ல முடியாது. ஆனால் அந்த வேதனையை வெளிப் படையாகக் காட்டிக் கொண் டேனா? இல்லை! அவளி டந்தான் வெளியிட்டேனா? அதுவும் இல்லை.

(தொடரும்...)


இவ்வளவு கொடூரமான சிற்பத்தை அமைத்தவனை அதி கமாகப் புகழ்ந்து பாராட் டுவது கூட எனக்குப் பிடிக் கவில்லை!

"கரிகாலா! இது என்ன விந்தை? உன்னுடைய வைர நெஞ்சு எப்போது இவ்வ ளவு இளக்கம் கொடுத்தது? இராஜாளி புறாவைக் கொன்று தின்பது அதனுடைய இயற்கை. சிங்கராஜா ஆட்டினிடம் இரக்கம் கொள்ள ஆரம்பித் தால் அது சிங்கராஜா அல்ல. அதுவும் ஆடாகத்தான் போய் விடும். சிம்மாசனத்தில் வீற்



# சிறுவர் அரங்கம்

## யானையும் பாலமும்



ஒரு மிக பெரிய காட்டில் ஒரு பெரிய யானை வாழ்ந்து வந் தது. அந்த யானையி னுடைய உருவத்தைப் பார்த்து அந்தக் காட்டில் வாழ்ந்து வந்த மிருகங்கள் எல்லாம் ரொம்ப பயத்தில இருக் கும்.யானை வருகின்ற பக்கம் கூட போகப் பயந்து அந்த மிரு கங்கள், தங்களுடைய குழந்தைகளுக்கு யானை ஒரு பெரிய அரக்கன் என்று கதை சொல்லி யானை இருக்கிற பக் கமே போக விடாமல் வைத்திருந்தது.

இதை எதுவுமே கண் டுக்காத யானை தனது வாழ்க்கையை நிம்ம தியாக வாழ்ந்து வந்தது. இருந் தாலும் சிறிய மிருகங்கள் தன்னை அரக் கனாகப் பார்த்து ஓடி ஒழியிறதைப் பார்த்து ரொம்ப வருத்தப்பட்டுக் கொண்டது யானை. தன்னோடு பழகாமல் தன்னைப் பற்றி எது வுமே தெரியாமல் தன்னை எல்லாரும் உதாசீனப் படுத்துவது யானைக்கு வருத்தத்தைத் தந்தது. இருந்தாலும் தைரிய சாலியான யானை அதனு டைய வாழ்க்கையை வாழ ஆரம்பித்தது.

ஒரு நாள் காட்டுக்குள்ளே பெரிய மழை பெய்தது. திடீர் என்று வெள்ளம் வர ஆரம்பித்தது. சிறிய மிருகங்கள் வாழுகின்ற இடத்தைச் சுற்றிப் பெரிய ஆறு மாதிரி தண்ணி ஓட ஆரம்பித்தது. அதனால தீவில மாட்டிக் கொண்ட மாதிரி எல்லா மிருகங்க ளும் உள்ளேயே மாட்டிக் கொண்டது.

வெளியே வந்து உணவு தேட முடியாத நிலை ஏற்பட்டது. எல்லா மிரு கங்களும் தங்களுடைய குட்டிகளோடு பட்டினி கிடந்தன. அப்போது அந் தப் பக்கம் வந்த யானை இதை எல்லாம் பார்த் தது. ரொம்ப நாளாவே தன்னுடைய வேலையை மட்டும் பார்த்துக் கொண்டு இருந்த யானை ஒன்றுமே பேசாமல் அங்கு இருந்து நடக்க ஆரம்பித்தது.

அப்போது ஒரு குட்டிக் குரங்கு, யானை மாமா எங்க ளது குடும்பமே பசியில் இருக்கிறது. எங்களுக்கு உதவக்கூடாதா என்று கேட்டது. அதைப் பார்த்து சிரிச்ச யானை நான்தான் அரக்கன் மாதிரி இருக் கேனே, என்னைப் பார் த்தால் பயமாக இல் லையா உங்களுக்கு என்று கேட்டது.

அப்போது அந்த குட்டிக் குரங்கு சொன்னது எங்களது அப்பா அம்மா உங்களின் உருவத்தை பார்த்து எங்களுக்கு எதுவும் ஆபத்து வந்திடக் கூடாது என்று சொல்லி வளர்த் தார்கள். ஆனால் ஒருத்த ரினுடைய உருவத்தை வைத்து அவர்களுடைய குணத்தை எடை போடக் கூடாது என்றும் சொல்லி இருக்கிறார்கள். உங்களு டைய அமைதியான வாழ்க்கை முறையைப் பார்த்த எனக்கு நீங்கள் ஆபத்தானவர் என்று தெரியவில்லை என்று சொன்னது.

முதல் முறையாக ஒரு சிறிய மிருகம் தன்னிடம் பேசுவதும் யானைக்கு ரொம்ப சந்தோசம். உடனே தனனுடைய துதிக்கை யைத் தண்ணிக்கு மேலே வைத்தது. உடனே அந்தக் குட்டி குரங்கு அதுமேல் ஏறி வெளியே வந்தது. உடனே எல்லா மிருகங்க ளும் யானையினுடைய துதிக்கையில் ஏறி அந்த இடத்தில இருந்து வெளியே வந்தன.

அன்றில் இருந்து யானையையும் தங்களில் ஒருத்தராக நினைத்துப் பழக ஆரம்பித்தன. அந்த சிறிய மிருகங்கள் தங் களினுடைய குழந்தைக ளையும் அந்த யானை யோடு விளையாட அனுமதித்தன. அதனால் ரொம்ப சந்தோசமா வாழ ஆரம்பித்தது யானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர், புகழுக்கு அடிமையாகாமல், பலனையும் எதிர்பாராது செய்வதே உண்மையான உதவி

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குற்றம் செய்தவர்களை தெய்வம் நின்றறுக்கும்

அரசன் அன்றறுப்பான். தெய்வம் நின்றறுக்கும் என்கிறது நம் தமிழ்.

ஆம், நீதி நெறி தவறாத மன்னர் ஆட்சியில் குற்றம் இழைத்தவர்களுக்கான தண்டனை உடனுக்குடன் வழங்கப்பட்டன.

இதில் மன்னர்களும் விதிவிலக்கன்று. பொற்கைப் பாண்டிய மன்னன், மனுநீதிச் சோழன் ஆகியோர் தமக்கான தண்டனையைத் தாமே வழங்கினர்.

எனினும் சமகால ஜனநாயகத்தில் ஆட்சியில் இருப்பவர்கள் தமக்கான அதிகாரங்களைப் பயன்படுத்திச் செய்கின்ற அட்டூழியங்கள் நிறையவே உண்டு.

அத்தகைய அநியாயங்கள், அக்கிரமங்கள் அப்படியே மறைந்து போய்விடும் என்பது அவர்களின் நினைப்பு.

ஆனால் அநியாயங்களை, அக்கிரமங்களைச் செய்துவிட்டு அதிலிருந்து தப்பித்து விடலாம் என யார் நினைத்தாலும் அது ஒருபோதும் நடக்காது.

உண்மை. செய்த குற்றங்களுக்கான – பாவங்களுக்கான அரச தண்டனைகளில் இருந்து சிலவேளைகளில் யாரும் தப்பிக்கலாம். ஆனால் தெய்வத்தின் தண்டனையிலிருந்து எவரும் தப்பித்துக்கொள்ள முடியாது என்பது சத்தியமான உண்மை.

1987 களில் பட்டலந்த வதை முகாமில் நடந்த சித்திரவதைகள் இப்போது பேசப்படுகின்றன.

இற்றைக்கு 38 ஆண்டுகள் கடந்து பட்டலந்த சித்திரவதை முகாம் பற்றி பேசப்படுகிறதெனில், இதுவே தெய்வம் நின்றறுக்கும் என்பதை உணர்த்துகிறது.

1948 தொடக்கம் 2024 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதிவரை இந்த நாட்டின் ஆட்சி அதிகாரம் ஐக்கிய தேசியக் கட்சியிடமும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிடமும் மாறி மாறிப் பகிரப்பட்டன.

இதன் காரணமாக இரண்டு தரப்புகளும் ஆட்சி அதிகாரத்தில் இருந்தபோது இழைத்த குற்றங்கள் அப்படியே கைவிடப்பட்டன.

ஆனால் இயற்கை அதற்கு உடன்படவில்லை. ஜே.வி.பி எனும் தேசிய மக்கள் சக்தியிடம் ஆட்சி செல்கிறது. இலங்கைத் திருநாடு சுதந்திரமடைந்து 76 ஆண்டுகள் கடந்த நிலையில், ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இந்த நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்கிறார். தொடர்ந்து அவரது கட்சி ஆட்சியமைக்கிறது. வெறும் மூன்று ஆசனங்களை மட்டுமே பாராளுமன்றத்தில் வைத்திருந்த ஜே.வி.பி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியமைக்கும் என்று எவரும் நினைத்திருக்கவில்லை.

ஆக, எவரும் நினைக்காதது நடந்துவிட்டது எனில் அங்குதான் தெய்வம் தனது தீர்ப்பை வழங்கத் திடம் கொண்டு விட்டதென உணர்தல் வேண்டும்.

இதுபோல கிழக்குப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ரவீந்திரநாத் கடத்திக் கொல்லப்பட்ட சம்பவம் இப்போது எழுந்து நிற்கிறது.

இதேபோன்றுதான் எங்கள் தமிழ் மக்களைக் கொன்றவர்கள் என்றோ ஒருநாள் குற்றக்கூண்டில் நிறுத்தப்படுவர்.

அதற்கான இறைவனின் தீர்ப்பு எழுதப்பட்டுக் கொண்டிருக்கிறது. தெய்வத்தின் அந்தத் தீர்ப்பை அமுல்படுத்த ஜனாதிபதி அநுர தவறினால், அவரின் இடத்தில் அந்த ஆண்டவன் கூட வந்தமரலாம்.

எனவே தமிழ் மக்களைத் துடிக்கத் துடிக்கக் கொன்றவர்களை – அவர்களின் வாரிசுகளை தெய்வம் நிச்சயம் தண்டிக்கும். இது சத்தியம்.

# முன்னைய சிங்களத் தலைவர்கள் போலவே அநுர தன்னைக் காட்டிக் கொள்கிறார்

## பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் காட்டம்

அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகி, புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்திருக்கும் நிலையில் தமிழ்மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளில் ஒன்றுகூட இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. அவ்வாறிருக்கையில் நாம் காணிகளை விடுவிப்போம், வீதிகளைப் புனரமைப்போம் என்று ஜனாதிபதி கூறுவதெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்கான யுக்தியின் ஒரு வடிவமேயாகும்.

மாறாக, அவரும் ஏனைய சிங்களத் தலைவர்களைப்போல தன்னை ஒரு சிங்களத் தேசியத் தலைவராகவே அடையாளப்படுத்துகின்றார் என இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கிட்டுப் பூங்காவில் நேற்று முன்தினம் (17) நடைபெற்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, "வடக்கு மக்கள் பாரம்பரியமான தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் பாரிய எதிர்பார்ப்புடன் என்மீது நம்பிக்கை வைத்து அமோக ஆதரவளித்துள்ளார்கள். என்மீதான நம்பிக்கையை நிச்சயம் பாதுகாப்பேன்" எனக் குறிப்பிட்டார்.

அதேவேளை மன்னாரில் அதே நாள் நடைபெற்ற பிரசாரக்கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைக்கும் உள்ளூராட்சிமன்றங்களால் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும்போது அவற்றுக்குக் கண்ணை மூடியவாறு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும் எனவும் வேறு கட்சிகள் ஆட்சியமைக்கும் உள்ளூராட்சி மன்றங்களால் சமர்ப்பிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டு முன்மொழிவுகள் குறைந்தபட்சம் 10 தடவைகளேனும் ஆராயப்படும் எனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் இக்கருத்து தொடர்பில் கடும் விசனத்தை வெளிப்படுத்திய சிவஞானம் சிறீதரன் இதுபற்றி மேலும் கூறியதாவது,

தமதுகட்சி ஆட்சியமைக்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கண்ணை மூடியவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்றும் ஏனைய கட்சிகளின் முன்மொழிவுகள் நன்கு ஆராயப்படும் என்றும் ஜனாதிபதி வெளியிட்டிருக்கும் கருத்து அவரது அறிவிலித்தனத்தைக் காண்பிக்கிறது.

ஏனெனில் நாட்டின் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுபவருக்கு ஒட்டு மொத்த மக்களும் வாக்களிப்பதில்லை. அவருக்கு வாக்களிக்காத எத்தனையோ பேர் இந்நாட்டில் இருக்கிறார்கள். அவ்வாறிருக்கையில் ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறுவது எதேச்சதிகாரப்போக்கிலான ஒரு அராஜகச் செயற்பாடாகும். இது ஜனாதிபதியிடம் இருக்கும் இனவாதத்தின் மற்றொரு முகமாகும்.

இருப்பினும் இக்கூற்றை தமிழ் மக்கள் ஒரு நல்ல சகுனமாகக் கருதமுடியும். ஏனெனில் வட, கிழக்கு மாகாணங்களின் உள்ளூராட்சி மன்றங்களில் இலங்கைத் தமிழரசுக்கட்சி உள்ளடங்கலாக தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தான் ஆட்சியமைக்கும். அவ்வாறிருக்கையில் இங்குள்ள உள்ளூராட்சிமன்றங்களுக்கு நிதி ஒதுக்கீட்டை வழங்க முடியாது என அரசாங்கம் கூறுமேயானால், எமக்கான தனிநாட்டைப் பிரித்துத்தருவதற்கான தீர்மானத்தை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இல்லாவிடின் அதனை முன்னிறுத்தி நாம் பொதுசன வாக்கெடுப்பு ஒன்றுக்குத் தயாராவோம். ஆகவே நாம் தென்னிலங்கையுடன் இணைந்து பயணிப்பதா? அல்லது பிரிந்து செல்வதா? என்பதைத் தீர்மானிப்பதற்கான கதவொன்றை தற்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திறந்துவிட்டிருப்பது வரவேற்கத்தக்க விடயமாகும்.

அதேபோன்று அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதியாகத் தெரிவாகி புதிய அரசாங்கம் அமைக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்திருக்கும் நிலையில் அரசியல் கைதிகளில் ஒருவர் கூட இன்னமும் விடுவிக்கப்படவில்லை. வீதிகள் புனரமைக்கப்படவில்லை. மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் தொழிற்சாலைகள் நிறுவப்படவில்லை.

சர்வதேச நாணய நிதியத்துடனான இணக்கப்பாட்டைப் பொறுத்தமட்டில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிமுகப்படுத்திய நடவடிக்கைகளையே இவர்கள் தொடர்ந்து முன்னெடுக்கிறார்கள். புதிய அரசாங்கத்திடம் சிறந்த பொருளாதாரக்கொள்கையோ, முன்நோக்கிப் பயணிப்பதற்கான திட்டமிடலோ, உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிப்பதற்கான வழிமுறைகளோ இல்லை.

அவ்வாறிருக்கையில் நாம் காணிகளை விடுவிப்போம், வீதிகளைப் புனரமைப்போம் என்று ஜனாதிபதி கூறுவதெல்லாம் மக்களை ஏமாற்றுவதற்கான யுக்தியின் ஒரு வடிவமேயாகும். மாறாக அவரும் ஏனைய சிங்களத் தலைவர்களைப் போல தன்னை ஒரு சிங்களத் தேசியத் தலைவராகவே அடையாளப்படுத்துகின்றார் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது என்றார். (ந-4,7)

## புளியங்குளம் கிராமத்தில் காட்டு யானைகள் அட்டகாசம்

### தீர்வு பெற்றுத் தருமாறு மக்கள் கோரிக்கை

வவுனியா - வேலங்குளம் கோவில் புளியங்குளம் கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு உட்புகுந்த காட்டு யானைகள் காய்க்கும் நிலையில் இருந்த பெருமளவு தென்னை மரங்களைச் சேதமாக்கிச் சென்றுள்ளன.

குறிப்பாக வேலங்குளம் கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட மடுக்குளம், கோவில் மோட்டை, செங்கற்படை, சின்னத்தம்பனை, சிவநகர், குஞ்சுக்குளம், கோவில் புளியங்குளம் போன்ற கிராமங்களுக்குள் அண்மைய நாட்களில் தொடர்ச்சியாக செல்கின்ற காட்டு யானைகள் விவசாய நிலங்கள் மற்றும் பயிர்களை சேதமாக்குகின்றன.

முன்தினம் இரவும் குறித்த கிராமங்களுக்குள் உட்புகுந்த யானைகள் காய்க்கும் நிலையில் இருந்த தென்னை மரங்களை நாசமாக்கியுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் நிலையில் எமக்கான தீர்வை எந்த ஒரு அதிகாரிகளும் இதுவரை முன்வைக்கவில்லை எனப் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிப்பதுடன்,

எமது கிராமத்தைச் சுற்றி மின் வேலியை அமைத்து தருமாறு பல்வேறு தரப்பிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம். ஆனால் இதுவரை எந்தப் பயனுமில்லை என கிராமமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

[illegible] (ந-4,7,250)

## பிள்ளையானின் சாரதியும் கைது

(மட்டக்களப்பு)

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிள்ளையான் என்ற சிவநேசத்துரை சந்திரகாந்தனின் சாரதியைக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினர் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த வழக்குத் தொடர்பான விசாரணைகளுக்காக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தன் கைது செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் 90 நாட்கள் தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விசுவாவசு வருஷ’ புத்தாண்டு பலன்கள்



**கிரகநிலை-** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் கேது - தைரிய வீரிய ஸ்தானத்தில் சந்திரன் - களத்திர ஸ்தானத்தில் சனி - அஷ்டம ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), புதன் - பாக்கிய ஸ்தானத்தில் சூரியன் - தொழில் ஸ்தானத்தில் குரு - அயன சயன போக ஸ்தானத்தில் செவ்வாய் என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 26-04-2025 அன்று ராகு பகவான்

வினர்கள், நண்பர்கள் உங் களுக்கு ஆதரவாக இருப்பார் கள். குடும்பத்தில் குதூகலம் பூத்துக் குலுங்கும். இல்லத்தில் உங்கள் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு இருக்காது. இல்லத்திற்குத் தேவை யான நவீன உபகரணங்களை வாங்குவீர்கள். வருமானம் சிறப் பாக இருக்கும். எனினும் சிக்க னமாக இருந்து சேமிப்புகளையும் பெருக்குவீர்கள்.

உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கு திடீ ரென்று தொழில் செய்யும் வாய்ப்புகள் கிடைக்கும். நன்றாக யோசித்துச் செயலாற்றுவீர்கள். சமுதாயத்தில் தலைவன் என்று பெயரெடுப்பீர்கள். இல்லத்தில் சுபகாரியங்கள் கைகூடும். சுய தேவைகளைக் குறைத்துக் கொண்டு உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்கு உதவி செய்வீர்கள். உங்கள் கெட்டிக் காரத்தனம் கூடும். செல்வாக்கு,

கடமைகளில் கண்ணும் கருத்துமாக இருப்பீர் கள். சிலநேரங்களில் சில இடை யூறுகளைச் சந்திக்க நேரிடலாம். பணவரவுக்குத் தடைகள் வராது. ஊதிய உயர்வினைப் பெறுவர். மேலதிகாரிகள் முழுமையான ஆதரவைத் தரும் ஆண்டாக இது அமைகிறது.

**வியாபாரிகள்:** திட்டமிட்ட வேலைகளில் கடுமையாக உழைப்பர். விற்பனைப் பிரதி நிதிகளை நியமிப்பர். இதனால் எதிர்பார்க்கும் அதிக லாபத்தைப் பெறுவர். கொடுக்கல் வாங்கல் நன்றாக அமையும். வங்கிகளி




விளையாட்டிலும் நன்கு தேர்ச்சி பெறுவர். ஆசிரியர்களின் பாராட் டும் பெற்று மகிழ்வர்.

மேலும் அதிக மதிப் பெண்களைப் பெற போதிய பயிற்சிகள் எடுத்து படிக்கவும். விளையாட்டினால் உடல் ஆரோக்கியத்தை வளர்த்துக் கொள்வர்.

**மகம்:** இந்த ஆண்டு பிரிந்திருந்த குடும்பம் ஒன்று சேரும். முயற்சிகளின் பேரில் சுபகாரியங்கள் தங்கு தடை யின்றி நடைபெறும். குழந்தை பாக்கியம் கிட்டும். வீட்டிற்குத் தேவையான அனைத்து வசதிகளும் கிடைக்கும்.

**பூரம்:** இந்த ஆண்டு புதிய வீடு, மனை ஆகியவற்றை வாங் கும் போது கவனம் தேவை. ஒருமுறைக்கு இருமுறை விசா

## அதிகார ஆளுமையும் நேர்மையும் கொண்ட சிம்ம ராசி நேயர்களே!

அஷ்டம ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறு கிறார். 26-04-2025 அன்று கேது பகவான் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து ராசிக்கு மாறுகிறார். 02-07-2025 அன்று சனி பகவான் வக்கிர நிலை ஆரம்பம். 17-11-2025 அன்று சனி பகவான் வக்கிர நிவர்த்தி அடைகிறார். 06-03-2026 அன்று சனி பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

11-05-2025 அன்று குரு பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-10-2025 அன்று குரு பகவான் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத் திற்கு மாறுகிறார். 18-11-2025 அன்று குரு பகவான் வக்கிரம் ஆரம்பம். 21-12-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் குரு பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறு கிறார் . 17-03-2026 அன்று குரு பகவான் வக்கிர நிவர்த்தி

**பலன்கள்:** அதிகார ஆளு மையும் நேர்மையும் கொண்ட சிம்ம ராசி நேயர்களே! உற

அந்தஸ்து இரண்டும் உயரும்.

ஏழைகளுக்குத் தானதர்மம் செய்வீர்கள். நீடித்து பாதித்து வந்த நோய்கள் முழுமையாக குணமடைந்து விடும். திடீர் அதிஷ்ட வாய்ப்புகளைப் பெறு வீர்கள்.

பெரிய ஆலய நிர்மாண வேலைகளிலும் ஈடுபடுவீர்கள். தேவைக்குமேல் பணம் வரும். வராமல் இருந்த கடன்களும் திரும்ப வந்து சேரும். பொழுது போக சுற்றுலா சென்று வரு வீர்கள். உங்கள் பகுத்தறியும் திறன் கூடும். மன உணர்ச்சிகள் கட்டுக்குள் இருக்கும்.

எண்ணங்கள் புதுமைகளாக மலரும். புதிய படைப்புகளை வாங்குவீர்கள். குடத்திலிட்ட விளக் காக காரியமாற்றி வந்தவர்கள் குன்றின்மேலிட்ட விளக்காகப் பிரகாசிப்பீர்கள். வெளிநாடு சென்று வரும் வாய்ப்புகளும் உண்டாகும். நேர்மையான செயல்களால் வீட்டி லும் வெளியிலும் நீதியைக் காப் பாற்றுவீர்கள். சிலர் விலையுயர்ந்த வாகனங்களை வாங்கும் கால கட்டமிது என்றால் மிகையாகாது.

**உத்தியோகத்தர்கள்:** அலு வலக வேலைகளை முன் கூட் டியே திட்டமிட்டு முடித்துவிட்டு நற்பெயர் எடுப்பர்கள்.

டமிருந்து கடன்கள் பெறுவர். கூட்டாளிகளின் ஆதரவும் கிடைக் கும்.

**அரசியல்வாதிகள்:** தொண் டர்களின் ஆதரவுடன் செயற்கரிய செயல்களைச் செய்வீர்கள். எதிரிக ளால் கஷ்டங்கள் உண்டாகாது என்றாலும் அவர்கள் மீது ஒரு கண்வைத்திருக்கவும். கட்சித் தலைமையிடம் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ளவும். சச்சரவுகளில் வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்ள வேண்டாம்.

**கலைத்துறையினர்:** வெற்றி மேல் வெற்றி காண்பர். புதிய ஒப்பந்தங்கள் கைகூடும். சக கலைஞர்களால் பாராட்டப்படுவர். ரசிகர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வர். புதிய நண்பர்களால் பலனுண்டு. புதிய படைப்புகளை உருவாக்குவர். பணவரவு நன் றாக இருக்கும். சேமிப்பு உயரும்.

**பெண்கள்:** கணவரிடம் அன்பு, பாசம் அதிகரிக்கும். உற வினர்கள் உங்களை அனுசரித்துச் செல்வர். ஆடை, அணிகலன்கள் சேர்க்கை உண்டு. வெளியூரி லிருந்து மனதிற்கினிய செய்தி களைக் கேட்பர். மேலும் சிறுசிறு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப் புள்ளதால் பேச்சில் நிதானம் தேவை.

**மாணவர்கள்:** கல்வியிலும்

ரித்து வாங்குவது நல்லது. நண் பர்கள், உறவினர்கள் அந் நியோன்னியமாக இருப்பர்.

**உத்திரம் 1 ஆம் பாதம்:** இந்த ஆண்டு உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு அதிகமாக உழைக்க வேண்டியிருக்கும். சற்று முயற்சி எடுத்தால் பதவி உயர்வு உங்களை வந்து சேரும். எதிர்பார்திருந்த பணி இடமாற்றம் உங்களை வந்து சேரும்.

**பரிகாரம்:** ஞாயிற்றுக் கிழமைதோறும் அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று நெய் விளக்கு ஏற்றி வழிபடவும். “எருக்க மலரை” சிவனுக்கு அல்லது கணபதிக்கோ அர்ப் பணம் செய்து வணங்கி வர நன்மைகள் கிடைக்கப் பெறு வீர்கள்.

மேலும் கோமாதாவிற்கு அமாவாசை தோறும் அகத்திக் கீரையும் கொடுக்கலாம். உங்க ளுக்கு அனைத்து காரியங்களும் தங்குதடையின்றி நடக்கும். கிழக்கு, வடக்கு திசைகள் அதிர்ஷ்டம் தரும். சூரியன் - புதன் - குருவினால் எதை ஆரம் பித்தாலும் தங்கு தடை யில்லாமல் காரியங்கள் நடந்து முடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சேது அணைத்...

அச்செய்தியின் பிரகாரம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தின்போது, இராமர் சேது அணைத் திட்டம் தொடர்பான விடயங்களை இலங்கை அரசாங்கம் புறக்கணிக்கும் விதமாக நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கவில்லை.

எனினும் பிரதமர் மோடி ஜனாதிபதி அநுர உட்பட இரு நாட்டு இராஜதந்திரிகளும் பங்கேற்ற உயர்மட்டக் கலந்துரையாடலின்போது இராமர் சேது அணைத் திட்டம் தொடர்பில் இந்தியத் தரப்பினர் கருத்துரைத்ததாகவும் ஆயினும் இலங்கை அரசாங்கம் அது குறித்து சாதகமாகப் பரிசீலிக்க மறுப்புத் தெரிவித்ததாகவும் குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை பாரதப் பிரதமர் இலங்கையிலிருந்து இராமேஸ்வரம் சென்று இராமர் பாலத்தினை தரிசித்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-7)

## ஜனாதிபதி...

முன்னதாக, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அண்மைக் காலத் தேர்தல் பரப்புரைகள் தேர்தல் விதிகளுக்கு முரணான வகையிலும் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் வகையிலும் உள்ளன என எதிர்க்கட்சிகள் அதிருப்தி வெளியிட்டிருந்தன.

இதேவேளை தேர்தல்கள் ஆணைக் குழுவும் தேர்தல் விதிகளை மீறுகின்ற அறிக்கைகள் மற்றும் கருத்துக்களை வெளியிட வேண்டாம் என ஜனாதிபதியின் செயலாளருக்கு எழுத்துமூலமாக அறிவுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பதவியேற்ற சில மாதங்களில், தனது பதவி நிலை கருதி உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்காதிருக்க முடிவு செய்துள்ளதாகக் குறிப்பிட்டிருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (ந-7)

## டிப்பரில்...

பதை அறியாத தந்தை டிப்பரைப் பின்புறமாகச் செலுத்தியுள்ளார். இதன்போது குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

இதில் தவக்குமார் சிந்துஜன் என்ற ஒன்றரை வயதுப் பாலகனே உயிரிழந்தவராவார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ந-7,316)

## ஜனாதிபதியின்...

ரான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் கருத்துத் தெரிவிக்கையில்,

மன்னார் நகர சபைக்குத் தேசிய மக்கள் சக்தியினரை மக்கள் தெரிவு செய்தால், அந்த நிர்வாகத்தின் திட்டங்களுக்குக் கண்ணை மூடிக் கொண்டு நாம் அங்கீகாரம் வழங்கி நிதி ஒதுக்கீடு செய்வோம்.

வேறு தரப்பிடம் நிர்வாகம் போனால் அவர்களின் திட்டங்கள் குறித்து ஒன்றுக்குப் பத்துத் தடவை பரிசீலித்தே முடிவெடுப்போம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அங்கு உரையாற்றி இருக்கின்றார்.

இந்த உரை அப்பட்டமான தேர்தல் விதிமுறை மீறலாகும். இது தொடர்பில் நாம் தேர்தல் ஆணையத்திடம் உத்தியோகபூர்வமாக முறையிட இருக்கின்றோம்.

மக்களுக்கு இலஞ்சம் கொடுத்து வாக்குத் திரட்டும் சமயோசிதப் பாணியே இந்த உரை. இதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கக் கோருவோம் எனவும் அவர் தெரிவித்தார். (ந-7)

## பொலிஸ் நிலை...

குளத்தின் சூடுவெந்தபுலவு அலைகரைப் பகுதியில் இருந்து கடந்த புதன்கிழமை (16) மாலை இளைஞர் ஒருவரின் சடலம் இரத்தக் கறையுடன் மீட்கப்பட்டிருந்தது.

சடலமாக மீட்கப்பட்டவர் கடந்த புதுவருடத்தன்று காணாமல் போயிருந்த வவுனியா விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த கோபிதாசன் (வயது-33) என்பவருடையது என அடையாளம் காணப்பட்டிருந்தது.

குறித்த இளைஞன் புதுவருடத்தன்று (14) காலை வீட்டில் இருந்து சென்றதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அதன் பின் அன்று காலையில் சூடுவெந்த புலவு வீதியில் அவர் நின்றதாகவும் தமது கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் வீதியால் மோட்டார் சைக்கிளில் சென்றபோது, மரணமடைந்த இளைஞர் தன்னை சிலர் தாக்குவதாகவும், உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் போறேன் என்றும் தன்னைப் பொலிஸ் நிலையத்தில் இறக்கி விடும்படியும் கோரியுள்ளார்.

இதனையடுத்து குறித்த இளைஞரை உளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் இறக்கி விடப்பட்டதாகவும், அவர் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றதாகவும் உறவினர்கள் தெரிவித்தனர்.

அதன்பின் அவரை தேடியும் கிடைக்காத நிலையில் இரண்டு தினங்களின் பின் கடந்த புதன்கிழமை அவர் சடலமாக மீட்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ள உறவினர்கள் இக்கொலைக் குற்றவாளிகளைக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் எனவும் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர். (ந-7,250)

## சி.ஐ....

துரை சந்திரகாந்தனின் நெருக்கமான சகா ஒருவர், தனது சுய விருப்பின் பேரில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராக வுள்ளதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகமொன்றிடம் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் ஆனந்த விஜேபால,

கம்மன்பில - பிள்ளையான் சந்திப்பின் போது பிள்ளையான் அழவில்லை.

அந்தச் சந்திப்பின்போது அருகில் இருந்த பொலிஸ் அதிகாரிகளிடம் இதனை வினவியிருந்தேன்.

ஈஸ்டர் ஞாயிறு தினத் தாக்குதல்கள் குறித்த விசாரணையை குழப்பும் வகையில் கம்மன்பில செயற்படுகிறார்.

பிள்ளையானுடன் இணைந்து சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபட்ட ஒருவர் விசாரணைக்கு சுயமாகவே முன்வருகிறார் என்றால், அவர்கள் இந்த விசாரணைகளில் இருந்து தப்பிக்க முடியாது என்பதை உணர்ந்திருக்கிறார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ந-7)

## காதலன்...

நில் நண்பர்களோடு நீராடச் சென்ற கொடிகாமம் தவசிக்குளம் பகுதியைச் சேர்ந்த சிவராசு சிலுசன் (வயது-23) என்ற இளைஞன் நீரில் மூழ்கி உயிரிழந்திருந்தார்.

இந்நிலையில் அவர் உயிரிழந்த செய்தியறிந்த அவரது காதலியான கொடிகாமம் மிருசுவில் பகதியைச் சேரந்த 18 வயதுடைய யுவதியும் பிரிவைத் தங்காது தனது உயிரை மாய்த்துள்ளார். (ந-7,30)

### மஹஜன சம்பத

திகதி 2025.04.18
சீட்டிழுப்பு இலக்கம் 5805
N 7 4 9 3 4 7

அத சம்பத: N 9 3 4 7 — சீட்டிழுப்பு இலக்கம் 380

National Lotteries Board

### தன நிதானய

திகதி - 2025.04.18
சீட்டிழுப்பு இலக்கம் - 1835
V 09 13 15 34 V
Double Chance 98647

### மெகா பவர்

திகதி 18/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2153
O 05 01 10 29 56

### ஜய

திகதி 2025.04.18
சீட்டிழுப்பு இலக்கம் 073
A 4 5 3 3

### கொவிசெத

சீட்டிழுப்பு இலக்கம் 4047
சீட்டிழுப்பு திகதி 18.04.2025
G 30 70 71 77
G

தேசிய லொத்தர் சபை

### HANDAHANA

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.18
சீட்டிழுப்பு இலக்கம் 1114
மிதுனம் 17 37 39 52 மிதுனம்
55898 — 49

### சுப்பர் ஜயசம்பத் (உத்தியோகபூர்வ முடிவுகள்)

18.04.2025 வெற்றி வாரம் 513
C 7 8 2 2 9 1
57094
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35,602,963.60

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 2779
சீட்டிழுப்பு திகதி 2025.04.18 — தினம் வெள்ளிக்கிழமை
23 46 62 72 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,690,626.40

### சனிதா

திகதி 18.04.2025 வெற்றி வாரம் 4940
16 22 24 40 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,693,584.00
78677

### சசிரி

664 — 18.04.2025 — வெள்ளிக்கிழமை
01 30 36
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

### ராசி

சீட்டிழுப்பு வாரம் 4491
சீட்டிழுப்பு திகதி 18.04.2025 — தினம் வெள்ளிக்கிழமை
20 22 32 55 — துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
110226

### கப்ருக

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
N 25 08 09 14 70
1955 — 18.04.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.572,248,155.60

### அட கோடிபதி (ADA KOTIPATHI)

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2605
சீட்டிழுப்பு திகதி: 2025.04.18
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,296,431.20
20 31 49 55 X
438792

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## Pearson International College



- இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
- கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
- எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
- இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching

074 188 7878, 074 385 7584
www.picsl.lk
TESL CANADA
TESL Ontario
(1009)



## சிறுநீரகம் தேவை

அவசரமாக $A^+$ வகை குருதியுடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது.
வயது எல்லை 25 - 40
தொடர்புகளுக்கு :
**077 041 6405**
Whatsapp
0031617990096(கொலன்ற்)
(1036)



**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**076 636 3378 | 076 097 3127**


## கதிர்காம பாத யாத்திரை

கதிர்காமக் கந்தன் ஆலயத்திற்கான பாத யாத்திரை எதிர்வரும் மே மாதம் முதலாம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மே முதலாம் திகதி வியாழக்கிழமை தொண்டைமானாறு செல்வச் சந்நிதியிலிருந்து பாத யாத்திரை ஆரம்பமாகும் எனவும் இதில் பங்கேற்க விரும்புபவர்கள் 076 308 4791 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளு மாறும் கேட்கப்பட்டுள்ளது. (ந-4,7)

## எம்மை நம்பி...

இரண்டு பிரதான தேர்தல்களிலும் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்துள்ளார்கள்.

இறுதியாக நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்கள், எமது கட்சிக்கு அமோக ஆதரவு வழங்கினார்கள். அதேபோல் நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தமிழ் மக்கள் எமது கட்சிக்குப் பேராதரவு வழங்குவார்கள் என்று நம்புகின்றோம்.

எமது கட்சியை நம்பி வாக்களித்த தமிழ் மக்களை நாம் ஒரு போதும் கைவிடமாட்டோம். நாட்டில் இனவாதம், மதவாதம் இல்லாத ஒரேயொரு கட்சி தேசிய மக்கள் சக்தி. அதனால்தான் தமிழ் மக்கள் எமது கட்சிக்கு அமோக ஆதரவு வழங்குகின்றார்கள்.

அவர்களின் எதிர்பார்ப்புக்களை நாம் நிறைவேற்றியே தீருவோம். இந்த நாட்டில் சிங்கள மக்களைப் போல் தமிழ், முஸ்லிம் மக்களும் சகல உரிமைகளுடன் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பம் என்றார். (ந-4,7)


# நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!

Premium Lands with 100% Legal Security

**8 இலட்சம் முதல்**

*தவணைக் கட்டண வசதிகள் செய்து தரப்படும்.



விளையாட்டு, ஆரோக்கியம், பாதுகாப்பு, பொழுதுபோக்கு என 20+ இற்கு மேற்பட்ட வசதிகளுடன்..!

- முல்லை – எழுதுமட்டுவாழ்
- மருதம் – கிழக்கு அரியாலை
- குறிஞ்சி – மலையகம் (ஹப்புத்தளை நகர்)
- நெய்தல் – மட்டக்களப்பு (வாவிக் கரையோரம்)

ஏப்ரல் 14ம் திகதிக்கு முந்திய பதிவுகளுக்கு விசேட விலைக்கழிவு

**இப்போதே முன்பதிவு செய்யுங்கள்!**

இயற்கையின் அரவணைப்பில் எதிர்காலத்திற்கான சிறந்த முதலீடு..!

இனிமையான வாழ்விற்கு.. GOOD GIFT PROPERTY DEVELOPERS (PVT) LTD.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
**+94 77 743 5557**
(C-2745)



## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி | Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி | தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : **0777 301 669**
(1037)



## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட மழைத்தூறல் பைப் (Rain Hose Pipe) Brand KSNM 40mm, 50mm இப்பொழுது எம்மிடம். இந்தப் புதிய தொழில் நுட்பத்திற்கான பாவனை நாடு பூராகவும் பயன்பட தொடங்கி விட்டது. எனவே இதைப் பொருத்தி விவசாயிகளே நல்ல விளைச்சலைப் பெற்றுக்கொள்ளுங்கள். அத்துடன் தூறல் நீர்ப்பாசனத்திற்கான சகல பொருட்களும் எமது நிறுவனத்திலே.

(உங்கள் தேவைக்கேற்ப பொருத்தியும் தரப்படும்)

"நாங்கள் உங்களோடு"



ஆர்க். என். கம்பனி
- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 535 7803
(3962)



## வேலையாட்கள் தேவை

யாழ். பிரபல உணவகமொன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.
- உணவு பரிமாறுபவர்கள்
- பாசல் கட்டுபவர்கள்
- சமையல் உதவியாளர்கள்
- ரொட்டி போடுபவர்கள்

தங்குமிடம்/ உணவு வழங்கப்படும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.
தொடர்புகளுக்கு : **077 407 8235**
(1041)



## வேம்படி மகளிர் பாடசாலைக்கான பிரத்தியேக பஸ் பாடசாலை சேவை



Shan Travels இன் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வேம்படி மகளிர் பாடசாலைக்கான பிரத்தியேக சொகுசு பஸ் பாடசாலை சேவை ஆரம்பிக்கபடவுள்ளது.

Shan Travels

மானிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை மாணவர்களுக்கு முதற்கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. அப் பிரதேசத்தில் இருப்பவர்கள் இணைந்து கொள்ளலாம்.

இருக்கைக்கு அளவான குளிரூட்டப்பட்ட சேவையாக ஆரம்பிக்கப்படவுள்ளதால் பதிவுகளுக்கு உடனே அழையுங்கள்.

**077 739 3078**
(3960)



## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை பிள்ளையார் ஆலயத்தில் இருந்து 200 மீற்றர் தூரத்தில் வீடு கட்டுவதற்கும், தோட்டம் செய்வதற்கும், பண்ணை அமைப்பதற்கும் உகந்த 9 பரப்பு நல்ல செம்மண் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு :
**076 419 6358**
(3970)



## வேலையாட்கள் தேவை

யாழிலுள்ள பிரபல சைவ உணவகம் ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
- சுத்திகரிப்பாளர் (ஆண்/பெண்)
- உணவு பரிமாறுபவர் (தங்கி நின்று வேலை செய்பவர் விரும்பத்தக்கது)

தொடர்புகளுக்கு :
**077 469 6695, 070 664 7466**
(3964)



## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2744)



## வீடு தேவை

யாழ்ப்பாணம், ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை போன்ற பிரதேசங்களில் சிறிய குடும்பம் ஒன்றிற்கு வாடகைக்கு வீடு தேவை.
(கார், வான் தரிப்பிடத்திற்கு உகந்த இடம்)
**077 706 4151**
(3972)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.